Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + II + II

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 16 வெள்ளிக்கிழமை (29.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 162

## மே 31, ஜீன் 4, 5ஆம் திகதிகளில் நாடு முழுவதும் ஊரடங்கு

(கொழும்பு)

நாளை மறுதினம் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மற்றும் எதிர்வரும் ஜீன் 4 வியாழன், மற்றும் ஜூன் 5 வெள்ளி ஆகிய தினங்களில் நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில், ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜூன் 06 சனிக்கிழமை வரையிலும் மற்றும் அதன் ▷15

## எதிர்வரும் திங்கள் 1200 ஆவது நாளன்று பாரிய போராட்டம் முன்னெடுக்கவுள்ளோம்

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

(வவுனியா)


எதிர்வரும் திங்கட்கிழமை பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத் தலைவி கா.ஜெயவனிதா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

முன்னாள் ஜனாதிபதி மைத்திரியின் நூறு நாள் வேலைத்திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றில் எனது ▷15

## வலி.வடக்கில் கிணற்றிலிருந்து

### மோட்டார் குண்டுகள் மீட்பு



▷15

### தரம் ஒன்றுக்கான அனுமதி

## இணைய மூலம் விண்ணப்பியுங்கள்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கு அரச பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்படிவம் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, முதலாம் தரத்துக்கு தமது பிள்ளைகளை அனுமதிக்க எதிர்பார்த்துள்ள ▷15

### மேலும் மூன்று மாதங்களின் பின்பே

# பொதுத் தேர்தல் நடைபெற வாய்ப்பு

### அமைச்சரவையில் ஜனாதிபதி கோட்டா கவலை



(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கருத்துக்களைப் பார்க்கும் போது பொதுத் தேர்தல் நடைபெற மேலும் மூன்று மாத காலம் ஆகும் என நான் நினைக்கிறேன் என அமைச்சரவையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவலை வெளியிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரச காணியில் சலுகை வட்டியில் வீட்டுக்கடன்

### அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன

(கொழும்பு)

நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சலுகை வட்டி அடிப்படையில் வீட்டுக் கடன் திட்டத்தை வழங்க நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அரசுக்கு சொந்தமான காணிகளில் வீடுக்களை அமைக்கும் வகையில் 20 முதல் 30 ஆண்டுகளுக்கு தவணை அடிப்படையில் மீளச் செலுத்தும் வகையில் ▷15

**தரம் - 5 புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த (சா/த) சித்திர பாடம் வினாத்தாள்கள் உள்ளே...**

## கொரோனா இடர்வேளையில் டெங்கு நோயும் பரவி வருகின்றது



### அவதானமாக இருக்குமாறு அரச அதிபர் க.மகேசன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொரோனா இடர் வேளையில் டெங்கு நோயும் சேர்ந்து பரவி வருகிறது. டெங்கு நோய்ப் பரவல் குறித்து அவதானமாகச் செயற்படுமாறு யாழ்.மாவட்ட அரசாங்க ▷15

## கிளிநொச்சியில் டிப்பருடன் மோ.சைக்கிள் விபத்து

### தாய் உயிரிழப்பு ; மகள் படுகாயம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் தாயார் உயிரிழந்ததுடன் மகள் ▷15

## கொரோனா தொற்று ஆயிரத்து 530 ஆக உயர்வு

### நேற்றும் 61 தொற்றாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 1530 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று 61 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் ▷15

## வாகன வருமான வரி அனுமதி பத்திரத்தினை

### விடுமுறை நாட்களிலும் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

விடுமுறை நாட்களில் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரத்தினை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் திருமதி சி.சுஜீவா ▷15

## மரண அறிவித்தல்



பிறப்பு 07 - 04 - 1933

இறப்பு 27 - 05 - 2020

# ஆறுமுகம் கந்தப்பு

யாழ்ப்பாணம் புலோலி வல்லிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தப்பு 27.05.2020 புதன்கிழமை அன்று பி.ப 6.30 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பார்வதியின் அன்பு மகனும் சின்னையா - வள்ளிப்பிள்ளையின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் திருக்கேதீஸ்வரநாதன் (பொறியியலாளர் - கொழும்பு), கௌரிமலர் (உப அஞ்சல் அதிபர் - புலோலி), நல்லைநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, நாச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் சாந்தலிங்கம், விஜிதா, வாசுகி ஆகியோரின் அன்பு மாமனாரும் அகிலன் (பொறியியலாளர் - லண்டன்), சர்வதனன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - லண்டன்), வினோதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கொழும்பு), கிருபன், கிரிசாந் (கொழும்பு), தேவகி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2020) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 8 மணியளவில் ஆனை விழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வல்லிபுரம், புலோலி.
தொ.பே: 077 474 3527

(C-9641)

தகவல்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



# பொன்னையா பாலசுப்பிரமணியம்

சாரையடி புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பாலசுப்பிரமணியம் நேற்று (28.05.2020) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வானை (நாகமுத்து) தம்பதிகளின் மூத்த புதல்வரும் கோவிந்தப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் (தங்கம்மா) அன்புக் கணவரும் மயூரனின் அன்புத் தந்தையும் தவச்செல்வியின் அன்பு மாமனாரும் சங்கவி, மசிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் பரமேஸ்வரி, பாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரரும் இலட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் நடராசா, கணேசலிங்கம், அமிர்தலிங்கம், பஞ்சலிங்கம், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், தியாகராசா மற்றும் வீரகத்திப்பிள்ளை, சகுந்தலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2020) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக் ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


சாரையடி, புலோலி தெற்கு,
புலோலி.

(C-9644)

தகவல்:-
குடும்பத்தினர்

2ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி



அமரர் ஜெகநாதன் சஞ்சீவன்

மலர்வு: 25.12.1986 உதிர்வு: 23.05.2018

திதி: 31.05.2020

இரண்டாம் ஆண்டு நினைவுகளில்
கரவெட்டி மண் சுமந்த முத்துக்கள்...
ஜெகநாதன் சஞ்சீவன் எம் குடும்ப சொத்துக்கள்...
உங்கள் சிரித்ததோர் தோற்றம் மறைந்ததோர்...
ஆண்டிரண்டு சென்றாலும் ஆறாது எம் துயரம்...
ஞாலத்தின் நாதனுமாய் காலத்தழிவில்லா சீவனுமாய்...
நிலைத்திருப்பீர் என்று நாம் நினைத்திருக்க...
யாழில் வானகம் பெயர் சொல்ல விட்டு விட்டு...
கானகனை வானகத்தில் தனியே விட்டு விட்டு...
தந்தையும் தனயனுமாய் சென்றீரோ...
ஆண்டிரண்டில் அழியா நினைவோடு - நாம்
உம் ஆத்மாவை ஆழப் பதித்திடுவோம்...



அமரர் மயில்வாகனம் ஜெகநாதன்

மலர்வு: 04.02.1960 உதிர்வு: 23.05.2018

கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
077 533 7406

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

வானகம் போன் சிற்றி
64/121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சம்பத் வங்கி முன்பாக) (KKS வீதியில் உள்ளது எமது கிளை இல்லை)

# மக்களின் மனதிற்கு மருந்தாகும் ஆலயங்களைத் திறக்க அனுமதியுங்கள்

## ஜனாதிபதியிடம் இறைஞ்சும் நஸீர்

(ஏறாவூர்)

கொரோனா வைரஸினால் முடக்கப்பட்டு மீண்டும் நாட்டில் அனைத்துச் செயற்பாடுகளும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நாட்டு மக்களை ஆன்மீக இறை வழிபாடுகளிலும் ஈடுபட அனுமதியுங்கள் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டிலுள்ள வழிபாட்டிடங்களைத் திறக்க அனுமதிக்குமாறு வேண்டுகோள் விடுத்து ஜனாதிபதிக்கு அவர் நேற்று வியாழக்கிழமை கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"கொரோனா வைரஸ் தாக்கத்தினிடையே பொருளாதார வளர்ச்சியின்பால் மக்களை மீட்டெடுக்கும் முயற்சியாக பல தரப்பட்ட சேவைகளும் பொருளாதாரத் துறைகளும் சுகாதாரப் பிரிவினரின் வழிகாட்டுதல் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்த வண்ணம் இயங்குவதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.


அதனடிப்படையில் அரச,தனியார் துறைகளும் பொதுப்போக்குவரத்தும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி இயங்கத் தொடங்கியுள்ளன.

நிறுவன ஸ்தாபன மட்டத்திலும் உல்லாச விருந்தினர் விடுதிகள், உணவகங்கள், அழகுக்கலை நிலையங்கள், மேலும் மதுபானக்கடைகள் கூட திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பொழுது திருமண நிகழ்வுகளும் ஆகக்கூடியது 100 விருந்தினர்களுடன் இடம்பெறுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இவை யாவும் வரவேற்கத்தக்க முன்னெடுப்புக்களாக இருந்தாலும் வழிபாடுகளில் ஈடுபட முடியாதவாறு அனைத்து மத வழிபாட்டிடங்களும் தொடர்ச்சியாக மூடப்பட்டே இருப்பது துக்கத்தை ஏற்படுத்துகிறது.

இதனால் சன்மார்க்கக் கடமைகள், மத நிகழ்வுகள், சமயச் சடங்குகள் என்பனவற்றை அனுஷ்டிக்க முடியாமல் நொந்து போக வேண்டியுள்ளது.

நான் இஸ்லாமிய விழுமியங்களைப் பேணி அர்ப்பணிப்போடு நடந்துகொள்ளும் ஒரு முஸ்லிம் என்ற அடிப்படையில், இந்த கண்ணுக்குத் தெரியாத நெருக்கடியான கொரோனா வைரஸ் தொற்று ஒரு சாபமாக சூழ்ந்துள்ள இந்தத் தருணத்தில் மார்க்கக் கடமைகளைச் செய்து, பாவமன்னிப்பின் மூலம் இறையருளைப் பெற்றுக்கொள்வதனூடாகவே இந்த நெருக்கடியிலிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பாக மீட்டெடுக்க முடியும் என நம்புகின்றேன்.



அதற்கு மத மதவழிபாட்டிடங்கள் இறை பிரார்த்தனைகளுக்காகத் திறந்து விடப்பட வேண்டும்.

அவ்வாறு இறை வழிபாட்டிடங்களில் பிரார்த்தனைகள் இடம்பெறுகின்ற பொழுது, மக்கள் தாங்கள் நீண்ட காலமாக முடங்கலுக்கு உள்ளாகியிருந்தமையால் ஏற்பட்ட உளத் தாக்கத்திற்கும் குணப்படுத்தலை ஏற்படுத்திக்கொள்ள முடியும்" என அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# அனைத்துப் பொதுச் சந்தைகளும் மக்கள் பயன்பாட்டிற்கு மீளத் திறப்பு

## யாழ். மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பொதுச் சந்தைகளும் மக்கள் பயன்பாட்டுக்காக மீளத் திறக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமைகள் தொடர்பாக யாழில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "யாழ். மாவட்டத்தில் தற்பொழுது இயல்பு நிலை படிப்படியாக திரும்பிக்கொண்டிருக்கும் நிலையில், பொதுச்சந்தைகளையும் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனப் பலராலும் கோரப்பட்டது. இது தொடர்பாக ஆளுநரும் சில பணிப்புரைகளையும் அறிவுறுத்தல்களையும் விடுத்திருந்தார்.

அதனடிப்படையில் யாழில் முக்கியமான சந்தைகள் அமைந்திருக்கின்ற பிரதேச சபையினர், உள்ளூராட்சி அதிகார சபையின் அதிகாரிகளுடனும் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தோம்.

அதனடிப்படையில் தங்களுடைய சந்தை தொகுதிகளை உரிய சுகாதார நடைமுறைகளுக்கு அமைய நடைமுறைகளைப் பின்பற்றி அவற்றை மீளத் திறப்பது குறித்து நடவடிக்கை தற்போது மேற்கொண்டு வருகின்றார்கள்.

இது அநேகமாக எதிர்வரும் திங்கட்கிழமை அதாவது ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு பிற்பாடு இவற்றை திறந்து செயற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

அதே நேரத்தில் சுகாதார ஒழுங்கு விதிகளை வியாபாரிகளும் அங்கு செல்லும் பொது மக்களும் பின்பற்ற வேண்டியது கட்டாயமாகும்.

சில விடயங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபையினருக்கும் கூறியிருக்கின்றோம். அந்தந்த பிரதேச செயலர்களுடன் அந்தப் பகுதி பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவுறுத்தல் அல்லது அவர்களுடைய கண்காணிப்பின் கீழும் இந்த சந்தையினை இயக்குவதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.



எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சந்தைகள் யாவும் வழமை போன்று மக்களுக்கு சேவையாற்ற திறக்கப்படவுள்ளது.

அத்தோடு பொதுமக்கள் சுகாதார நடைமுறையினையும் சமூக இடைவெளியினையும் பின்பற்றி சந்தையினை பயன்படுத்திக்கொள்ளுமாறும் நான் கோரிக்கை விடுகின்றேன்" என தெரிவித்தார். (ஜ-4)

# 2021 இல் தரம் 1 அனுமதி விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

2021 இல் முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைக்கு அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்திலேயே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# ஆறு கோடி ரூபாய் பெறுமதியான போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

6 கோடி ரூபாய் பெறுமதியான போதை மாத்திரைகளுடன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்,

களனி பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபர் புலுகங்க பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபரிடமிருந்து 6 கோடி ரூபாய் பெறுமதியான போதை மாத்திரைகளும் 3 கிராம் 360 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் ஊடாக பியகம பகுதியிலும் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 3 கிராம் 120 மில்லி கிராம் ஹெரோயினுடனும் சொகுசுக்கார் ஒன்றுடனும் மற்றொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஜ-8)

# வீழ்ச்சியடைந்த நிதி நிறுவனங்களுக்கு நிவாரணம் வழங்கத் திட்டம்

(கொழும்பு)

கொரோனா தொற்று காரணமாக பின்னடைவைச் சந்தித்துள்ள நிதி நிறுவனங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளரினால் அறிக்கையொன்று கோரப்பட்டது. கொரோனா தொற்று காரணமாக பின்னடைவை சந்தித்த நிதி நிறுவனங்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் குறித்த அறிக்கை கோரப்பட்டுள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளரினால் மத்திய வங்கியின் ஆளுநரிடம் அறிக்கை கோரியிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# கொரோனா வதந்தி கைது வேட்டை ஆரம்பம்

(கொழும்பு)

கொரோனா தொற்று தொடர்பில் சமூக வலைத்தளங்களில் போலிப்பிரசாரங்களை பரப்பிய சுமார் 400 சம்பவங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறான போலித்தகவல்களை பரப்புவது தொடர்பில் இதுவரை 16 பேர் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸார் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதுவரை கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் முன்னாள் ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர், வைத்தியர்கள், பல்கலைக்கழக நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# உற்ற நேரத்தில் உதவிய கரங்கள்



முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் 43 குடும்பங்களுக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் உலருணவுப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஜ-4-5)

லண்டனில் வசிக்கும் மனித உரிமைகள் செயற்பாட்டாளரான கீத் குலசேகரத்தின் நிதியுதவியில் லண்டனில் இயங்கும் தமிழர் தகவல் நடுவம் என்ற அமைப்பின் சகோதர அறக்கட்டளையான Center for Community Development இன் ஊடாக யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த 22 தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கு தலா 5000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (ஜ-4-5-9)





கன்பொல்லை மக்கள் நலன்புரி ஒன்றியத்தால் கரவெட்டி தெற்கிலுள்ள முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் உள்ள 700 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு போசாக்கு உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஜ-5-8-60)



நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக முல்லைத்தீவு மாவட்டம் பாண்டியன்குளம் சிவயோக சுவாமிகள் அறநெறிப்பாடசாலை நிர்வாகத்தால் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிராட்டிகுளம், பாண்டியன்குளம், செல்வபுரம், பூவரசங்குளம் மற்றும் பாலைப்பாணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 25 முதியவர்களுக்க மருத்துவச் செலவுக்காக 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. (ஜ-5)



பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியத்தின் நிதியுதவியில் நீலன் அறக்கட்டளையால் 115 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

வட்டக்கச்சி, விசுவமடு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, கிருஸ்ணபுரம், பாரதிபுரம், செல்வாநகர், மலையாளபுரம், உதயநகர், ஸ்கந்தபுரம், வவுனியா ஆகிய பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு இவ் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஜ-4-5-272)



வடமராட்சி கால்பந்தாட்ட சங்கத்தால் தமது கழகத்தில் அங்கத்துவம் பெற்ற 18 விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த 180 வீரர்களுக்கு அண்மையில் பண உதவி வழங்கப்பட்டது. (ஜ-4-5-8-60)



உலக உதைபந்தாட்ட சம்மேளனம் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு வழங்கிய நிதி உதவியின் கீழ் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 300 உதைபந்தாட்ட வீரர்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை மன்னாரில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஜ-4-5)



சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினால் இரண்டாம் கட்ட நிவாரணப் பொருள் விநியோகச் செயற்றிட்டத்தில், கடந்த 19 ஆம் திகதி பண்டத்தரிப்பு சாந்தை கிராமத்தில் வசிக்கும் 150 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஜ-4-5)



கொவிட் 19 அசாதாரண சூழ்நிலை காரணமாக பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட காரைநகர் தனியார் சிற்றூர்தி சங்க உறுப்பினர்களுக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் அண்மையில் உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (ஜ-4-5)




வவுனியா வடக்கு, பரசங்குளம் லைக்கா கிராமத்தில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட 82 குடும்பங்களுக்கு செரண்டிப் சிறுவர் இல்லத்தால் நிவாரணப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஜ-4-5-250)



அவுஸ்திரேலிய தமிழ் பொறியியலாளர் சங்கத்தின் உதவியுடன் இலங்கை இந்து பேரவையினூடாக வவுனியாவைச் சேர்ந்த 25 கலைஞர்களுக்கு அத்தியாவசிய உணவுப்பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன. (ஜ-4-5)



சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பால் மாவிட்டபுரம் - வீமன்காமம், கீரிமலை - செந்தெழு மாதிரிக் கிராமம், தெல்லிப்பழை மற்றும் மந்துவில் வடக்கு ஆகிய பிரதேசங்களில் 300 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஜ-4-5)



புலம்பெயர்ந்து சுவிஸில் வாழ்ந்து வரும் கொக்குவில் பொற்பதியைச் சேர்ந்த திருமதி.ஈஸ்வரி உதயசங்கரின் நிதிப் பங்களிப்பில் பொற்பதி அறிவாலயத்தால் அப்பகுதியைச் சேர்ந்த 59 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஜ-4-5-18)

# இராசிபலன்

29.05.2020
வைகாசி 16, வெள்ளிக்கிழமை
சப்தமி முன்னிரவு 7.18 மணிவரை
மகம் பின்னிரவு 3.42 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
இராகுகாலம் 10.22 - 11.52 மணிவரை
சந்திராஷ்டமம் உத்தராடம்

வளவன்

**மேஷம்**
உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்**
விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்**
சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்**
குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்**
விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றிப் பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி**
வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**துலாம்**
அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் முன்னேற்றகரமாக அமையும், விரதம், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**
தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு**
அரைகுறையாக இருந்த பணிகளை செய்து முடிப்பீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள்.

**மகரம்**
கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம்.

**கும்பம்**
மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மீனம்**
பகைவர்கள் விலகுவர், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கடன் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்க்க முடிவுகள் எடுப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.

உனது உடலும் உயிரும் நலமுடன் வாழ உன் பாவத்தை விட்டுவிடு

# மட்டு.வேலையற்ற பட்டதாரிகள் மாவட்டச் செயலரிடம் மகஜர்



(ஏறாவூர்)
மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளால் மாவட்டச் செயலாளரிடம் பல வேண்டுகோள்கள் உள்ளடங்கிய மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாவட்டச் செயலாளர் கலாமதி பத்மராஜாவிடம் மாவட்டச் செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்ட அந்த மகஜரில் பட்டதாரிகளது வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த மகஜரில், பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட நியமனம் இடைநிறுத்தப்பட்டது தொடர்பாக தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என்றும் பயிற்சிக்காக அனுப்பப்பட்ட கடிதங்கள் பட்டதாரிகள் என்ற வகையில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் வருமானமின்றி இருக்கின்ற பட்டதாரிகளின் மீது கவனம் செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# கொரோனாவால் அதிரும் பிரேஸில் 25 ஆயிரத்தைக் கடந்தது பலி

(ரியோடி ஜெனிரோ)
பிரேஸிலில் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 25 ஆயிரத்தைத் தாண்டியது.

கொரோனா வைரஸின் தாக்கம் உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிற நிலையில் கொரோனாத் தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கையில் அமெரிக்கா தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

அமெரிக்காவைத் தொடர்ந்து பிரேஸில் இரண்டாம் இடத்தில் உள்ளது. அங்கு கொரோனாத் தொற்று பாதிப்பு எண்ணிக்கை 4 இலட்சத்தை நெருங்கவுள்ளது.



இதேபோல், பிரேஸிலில் கொரோனா வைரஸிற்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 25 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.


கொரோனாவிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை ஒன்றரை இலட்சத்தைத் தாண்டியுள்ளது. (ஜ-2)

# வலையில் சிக்கிய இராட்சத திருக்கை ஒரு இலட்சம் ரூபாவிற்கு விற்பனை

(ஏறாவூர்)
மட்டக்களப்பு பூநொச்சிமுனை மீனவர்களால் 500 கிலோ எடை கொண்ட பாரிய இராட்சத திருக்கை மீன் பிடிக்கப்பட்டுள்ளது.

கடல் கொந்தளிப்பு காரணமாக குறித்த பாரிய திருக்கை மீன் கடல் அலைகளால் கரைக்கு அடித்து வரப்பட்ட நிலையில் குறித்த திருக்கை நேற்று முன்தினம் மாலை மீனவர்களால் பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மீன் கரைக்கு பெருமளவு மீனவர்களால் இழுத்து வரப்பட்டு வெட்டப்பட்டு சுமார் ஒரு



இலட்சம் ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. (ஜ-4)


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குரிய பின்வரும் பாவித்த பொருட்கள் பகிரங்க ஏலத்திற்கு விற்கப்படவுள்ளன

**காலம் : 12.06.2020 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி**
**இடம் : தலைமை அலுவலகம், வலி.தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

**பொருட்கள் விபரம்**
இலத்திரனியல் பொருட்கள், வாகன பற்றிகள், உலோகப் பொருட்கள், மின்னியல் பொருட்கள், தளபாடங்கள்

**நியந்தனைகள்**
01. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 100.00 (NBT தவிர) மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக செலுத்தப்பட வேண்டும்.
02. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத்தொகை முழுவதையும் செலுத்திப் பொருட்களை அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.
03. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

(C-9639)

தொலைபேசி இலக்கம்
0212240017

க.தர்சன் தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

### அமைச்சர் டக்ளஸின் தீர்மானத்தை ஏற்று

# அம்பன் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க அமைச்சரவை அனுமதி



(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை ஏற்று "அம்பன்" புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த வாரம் யாழ்.மாவட்டத்தில் வீசிய அம்பன் புயலால் சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட வாழைச் செய்கை மற்றும் பப்பாசிச் செய்கை முற்றாக அழிக்கப்பட்டது.

இதனால் குறித்த பயிர்களை பயிரிட்ட விவசாயிகள் பெரும் பொருளாதார நட்டத்தை எதிர்கொண்டனர்.

இதையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் குறித்த விவசாயிகள் தமது பயிரழிவுக்கு நட்டஈடுகளைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

இந்நிலையில் பயிரழிவுகளை நேரில் சென்று பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதிப்புக்களுக்கு நட்டஈடு பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது குறித்த பயிரழிவுகளுக்கு நட்டஈடு வழங்கப்படவேண்டும் என கோரிக்கை முன்வைத்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை குறித்த அம்பன் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க அனுமதி அளித்துள்ளது. (2-5)



தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் ஜே/216, அளவெட்டி மத்தி பிரிவிற்கான கிராமியச் செயலகத்தின் திறப்பு விழா கடந்த 21 ஆம் திகதி கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. இக் கட்டடம் இராசையா சிவகுமாரனின் நிதியுதவியினால் அமைக்கப்பட்டது. இந் நிகழ்வில் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் ச.சிவசிறி மற்றும் திட்டமிடல் பணிப்பாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இரண்டாண்டுகளுக்கு சொத்துவரி அதிகரிக்காது

### –பந்துல குணவர்த்தன–

(கொழும்பு)

சொத்து வரியை இரண்டு வருடங்களுக்கு அதிகரிக்காமலிருக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இதில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக சகல ஆளுநருக்கும் அறிவிக்கப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: 10 ¾ செவ் 10 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:B.Com, Accountant<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10777 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 56 செவ் 8 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. Accounts Clerk<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்.<br>தொ.இ: G/7985 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: செவ் 2 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி, தொழில்நுட்ப உத்தியோகத்தர். எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/10797 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 27 செவ் 5 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. அபிவிருத்தி உத்தியோகத்தர்.<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்<br>தொ.இ: G/7989 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>கி.பா: 14 செவ் 10 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: B.Sc முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10799 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: செவ் 1 ல<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Management. ஜேர்மனியில் கொம்பனியில் வேலை.<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டில் வேலை செய்யும் விசா உள்ள மணமகன் மட்டும்<br>தொ.இ: G/7994 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: 2 ¾ செவ் 12 ல்<br>உயரம்: 174cm<br>தகைமை/தொழில்:க.பொ.த.உ.த. வெளிநாடு<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10800 | பிறப்பு: 1989 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: B.Sc Engineering. பொறியியலாளர்.(சிவில்)<br>எதிர்பார்ப்பு: B.Sc Engineering.<br>தொ.இ: G/8000 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# இராணுவ அதிகாரிகள் ஐவருக்கு பதவியுயர்வு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் ஐந்து சிரேஷ்ட பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரல்களாக பதவியுயர்த்தப்பட்டுள்ளனர். இந்த பதவியுயர்வுகள் கடந்த 22 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது. பிரிகேடியர் ஏ.என். அமரசேகர, பிரிகேடியர் என்.எல்.கே.சமரசிங்க, ரி.டி.வீரக்கோன், ஐ.எச்.எம்.என்.என்.ஹேரத் மற்றும் டி.எஸ்.சாலி ஆகியோரே மேஜர் ஜெனரல்களாக பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.

இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவின் பரிந்துரையின் கீழ் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த பதவியுயர்வுகளை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சமூக இடைவெளியைப் பின்பற்றாவிடின் காணொளி காட்சியுடன் நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

சமூக இடைவெளியைப் பின்பற்றாத 200 இற்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நேற்று கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ், புலனாய்வுப் பிரிவு மற்றும் சிவில் உடை தரித்த பொலிஸார் சமூக இடைவெளியை மீறுபவர்களைக் கைது செய்வதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கைது செய்யப்படுபவர்கள் காணொளிக் காட்சிகளுடன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார்கள் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண அறிவித்துள்ளார். (ஜ-8)

# வேலணை இளைஞர்களின் மனிதாபிமான செயல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வேலணை மேற்கு சிற்பனையில் உள்ள கிணற்றுக்குள் மாடு ஒன்று விழுந்து உயிருக்குப் போராடிய நிலையில் அப்பகுதி இளைஞர்களால் காப்பாற்றப்பட்டுள்ளது.



வேலணை பிரதேச சபையின் உப தவிசாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் அப்பகுதி இளைஞர்கள் இணைந்து குறித்த மாட்டை மீட்டனர்.

பல மணி நேரமாக கிணற்றுக்குள் வீழ்ந்து உயிருக்குப் போராடிய நிலையிலேயே குறித்த மாடு காப்பாற்றப்பட்டுள்ளது.

இதேவேளை தீவகப் பகுதிகளில் அண்மைக்காலமாக வளர்ப்பு மாடுகள், கட்டாக்காலி மாடுகள் என்பன திருடப்பட்டு இறைச்சியாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில், அப்பகுதி இளைஞர்களின் இம்முயற்சி பலராலும் பாராட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2-5)



# ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை



## சுஜீவ திட்டவட்டம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பதற்கான உரிமை எவருக்கும் இல்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக வேறு கட்சிகளில் இணைந்துகொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் அகிலவிராஜ் காரியவசத்தின் கருத்திற்கு விளக்கமளிக்கும் போதே சுஜீவ சேனசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின்செயற்குழுவின் அனுமதியுடனேயே ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கியுள்ள தாகவும் இதன் காரணமாக எவரும் கட்சியின் யாப்பை மீற வில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவரையாவது இடைநிறுத்த வேண்டும் என்றால் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலரையும் கட்சியின் யாப்பு குறித்து அறியாதவர்களையுமே இடை நிறுத்த வேண்டும் எனவும் சுஜீவ சேனசிங்க சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# அண்ணாவிற்கு தம்பி வாழ்த்து

(கொழும்பு)

நாட்டின் பிரதமரான மகிந்த ராஜபக்ஷவிற்கு அவரது இளைய சகோதரரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அரசியல் வாழ்க்கையில் 50 வருடங்களை பூர்த்தி செய்வதனை முன்னிட்டு ஜனாதிபதி, பிரதமருக்கு வாழ்த்தினை தெரிவித்துள்ளார்.

தனது முகநூல் பக்கத்தின் ஊடாக ஜனாதிபதி இந்த வாழ்த்துச் செய்தியினை வெளியிட்டுள்ளார்.

அண்மைய அரசியல் வரலாற்றில் இலங்கை வாழ் மக்களுக்கு, மகிந்த ராஜபக்ஷ என்னும் பெயர் மிகச்சிறந்த ஓர்அரசியல் ஆளுமையாக தடம் பதித்துள்ளது. 50 ஆண்டுகளுக்கு முன்னர் அரசியலில் பிரவேசித்த மகிந்த ராஜபக்ஷ இரண்டு தடவைகள் நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக கடமையாற்றியுள்ளார். இன்று இலங்கையில் மக்களினால் நேசிக்கப்பட்டு வரும் வெற்றிகரமான தலைவராக திகழ்வதுடன் இன்றும் பிரதமராக நாட்டுமக்களுக்கு தொடர்ச்சியாக சேவையாற்றி வரு கின்றார். அவரது அரசியல் பயணம் மேலும் வெற்றிகரமாக முன்னோக்கிச் செல்ல வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன் என ஜனாதிபதி கோட்டாயராஜபக்ஷ தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)


## ஆள் தேவை

முல்லைத்தீவுப் பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை.

ஆரம்பச் சம்பளம் மாதம் - 30,000/=

தொலைபேசி: 077 1681697
077 1133667



## சேவைநலன் பாராட்டுவிழா



திருமதி
**சுகர்னியா ஞானகோபால்**

பாரினில் புகழ் ஓங்கிடவே
நல்லாசிரியராய் பணியாற்றி
ஓய்வுக் காலத்தில்
சேவைதனை நினைத்து
பெருமையுடன் மகிழ்வடைந்திட
மணிவிழா காணும் நாயகியை
மனதார வாழ்த்துகின்றோம்

**சேவை விபரம்**

கொழும்பு இந்துக் கல்லூரி:- 10.09.1979-20.05.1984
யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்:- 20.05.1984-07.08.1990
யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை:- 08.08.1990-01.05.2001
யா/நாவலர் மகா வித்தியாலயம்:- 01.05.2001- 19.09.2003
யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்:- 22.09.2003-29.05.2020

(2007)

வாழ்த்துவோர்:
ஆசிரிய நலன்புரிக்கழகம், யா/பெரியபுலம் மகா வித்தியாலம்



## யாழ்.மாவட்டம் வரமராட்சி வடக்கு தும்பளை நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

(இத்திமரத்தாள்-மாமரத்தாள்)



# வெளிமடைப் பூஜை ஓர் அறிவித்தல்

(29.05.2020) வெள்ளிக்கிழமை, (30.05.2020) சனிக்கிழமை

**இவ் வருடம் மிகவும் அடக்கமான முறையில் அம்பாளின் வெளிமடை நிகழ்வுகள் நடைபெறும். எனவே அடியார்கள், அன்பர்கள் யாவரும் சமூக இடைவெளியைப் பேண வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறீர்கள். அடியவர்கள் நேர்த்திகள் யாவும் அடுத்த வெளிமடை நிகழ்வுகளில் இரட்டிப்பாக ஆற்ற முடியும்**

### அருளாசிச் செய்தி

இத்திமரத்தாள் என்றும் மாமரத்தாள் என்றும் எம் முன்னோராலும் எம்மாலும் அழைக்கப்படும் நெல்லண்டைப் பத்திரகாளித்தாய் திருவருள் இந்நாளில் எங்கும் பரவிக்கலக்க வேண்டுமென்று எம் அன்னையின் அடிமலர் தாள் சரண்புகுந்து வாழ்த்துவோமே.

இற்றைக்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரே எமக்குத் திருவருள் தர அமர்ந்து கொண்ட அன்னை கணம் கணம் தோறும் பல்லாயிரம் பக்தர்களின் கடுவினைகளைக் களைந்த வண்ணம் உள்ளாள்.

(இத்திமா மால் துணைவி) என்று பழைய வெண்பா பாடல் வலி சான்று பகரும்.

ஆத்தாள் அருளுதி நெல்லண்டை மாநிழல் மேவிய அன்னையே!என்றும் சான்று பகரும் "கூத்துவர்ந்தாய் நேர்த்தியெல்லாம்" என்றும் பண்டிதர் நமசிவாய தேசிகர் திருவூஞ்சல் மூலம் விளக்கியுள்ளார். எமது முன்னோர் வழிவழியாக எமது உரித்தை முழுக்க முழுக்க சட்ட பூர்வமாகக் கொண்டு வழ.இல.53/2001 ஆம் ஆண்டின் கொழும்பு மீளாய்வு நீதிமன்றமும் அதன் பின் யாழ்.உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் எம் அன்னையின் பூசையில் யாரும் தலையிடா வண்ணம் எம் அன்னை நெல்லண்டைப் பத்திரகாளி திருவருள் பொழியும் வண்ணம் உதவிய எமது குருமார் சிவப்பிரம்மஸ்ரீ சதாசிவக்குருக்கள் நியாய சிரோன்மணி சுப்பிரமணிய சாஸ்திரிகள், நாராயண சாஸ்திரிகள், ஆன்மார்த்தா தீட்சாகுரு சிவஸ்ரீ கந்த சிவபாதசுந்தரக்குருக்கள், பேராசிரியர் சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி சிவலிங்கராஜா, அருள்நங்கை சண்முகநாதன், சபா ஜெயராசா, கலாநிதி. த.கலாமணி அவர்கட்கும் எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அவர்களையும் வணக்கம் செலுத்துகின்றோம்.

எமது தந்தையார் சிவஸ்ரீ கந்த.தியாகராஜா குருக்கள் அவர்தம் நண்பர் சிதம்பரப்பிள்ளை வாமதேவன் (உத்தரவு பெற்ற நில அளவையாளர்) மற்றும் சி.மு.கந்தசாமி, கமலேஸ்வரன், கதிர்வேற்பிள்ளை, வீரகத்திப்பிள்ளை, நடராசா சற்குணராசா, இராஜதுரை அவர்களும் (அமரர்), ருத்திரா (சிரேஷ்ட சட்டத்தரணி), உருத்திரேஸ்வரன் விஜயராணி, (சட்டத்தரணி) அன்பு நண்பர் தம்பு இராமச்சந்திரன் அவர்களுக்கும் என நாளாந்த வணக்கத்தை எம்மன்னை நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி திருவருள் நிதம் தருவாள்.

அன்னையின் மாதாந்த, வருடாந்த உற்சவங்களையும் உபயங்களையும் செய்யும் அனைத்து மெய்யடியார்களுக்கும் மற்றும் நான் நலிவுற்ற காலத்தில் உதவிய எல்லா அன்பு நெஞ்சங்கள், அனைத்து மெய்யடியார்கள், அன்பர்கள், பெரியவர்கள் அனைவர்க்கும் நன்றியுடன் அன்னையிடம் வணக்கம் செலுத்தி ஆசி கூறி வாழ்த்தி மீண்டும் அன்னை ஸ்ரீ நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஸ்ரீ நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம், ஸ்ரீ வீரமகாகாளி அம்மன், வடபத்திர காளி அம்மன், இலட்மணன் தோட்டம் அருள்மிகு பிள்ளையார் திருவருளும் பொழிக என வணங்கி விடை பெறுகின்றோம்.



சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
(BA, Dip in Edu, MA பிரதியதிபர்) ஓய்வுநிலை
தும்பளை, நெல்லண்டை, பருத்தித்துறை

ஆதீனஹர்த்தா சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள் (BA, Dip. in Edu, MA பிரதியதிபர்)

சிவஸ்ரீ சோமஸ்கந்த தனஞ்சயன் குருக்கள்

பிரதமகுரு சிவஸ்ரீ இராம சுந்தரலிங்கக் குருக்கள்

**நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் பரம்பரை குருக்கள்**
**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தனஞ்சயன் குருக்கள்**

**இங்ஙனம்:ஆலய ஆதீனகர்த்தாக்கள்**

(2900)

# அமைச்சர் தொண்டமானின் உடலுக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் அஞ்சலி







(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானின் உடலுக்கு நாடாளுமன்ற வளாகத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று முற்பகல் 11.10 மணியளவில் மறைந்த அமைச்சர் தொண்டமானின் உடல் பாதுகாப்புக்கு மத்தியில் நாடாளுமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரிய, முன்னாள் பிரதி சபாநாயகர், முன்னாள் குழுக்களின் பிரதி தவிசாளர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

நாடாளுமன்றத்தைச் சூழ வெள்ளைக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்ததுடன், சுகாதார நடைமுறை மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றியே அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## விமான நிலையத்தை மீண்டும் திறப்பது தொடர்பான அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை மீண்டும் திறப்பது தொடர் பான திட்டங்கள் அடங்கிய அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

கொரோனாத் தடுப்பு செயலணியால் குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை திறப்பது தொடர்பான யோசனை அறிக்கையில் முன்வைக்கப்பட்டது.

வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத் துறையை மீளக் கட்டியெழுப்புவதே இதன் நோக்கமாகும்.

இது குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் குறித்த செயலணிக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலின் முதற்கட்டமாக இலங்கை சுற்றுலா அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல் மற்றும் உணவகங்களை உள்நாட்டுப் பயன்பாட்டுக்கெனத் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

சுற்றுலாப் பயணிகள் அதிகம் செல்லும் பிரதேசங்களில் சர்வதேச மொழித்திறன் பெற்ற தரப்பினர் மூலம் சுற்றுலாப் பயணிகள் பின்பற்ற வேண்டிய சுகாதார ஆலோசனைகளைத் தெளிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போதே விமான நிலையத்தை மீண்டும் திறப்பது தொடர்பிலான அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-8)

## உயர்தரப் பரீட்சைகள் பிற்போடப்படும் சாத்தியம்

(கொழும்பு)

க.பொ.த.உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் நடத்துவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக கடந்த மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் பாடசாலைகள் மூடப்பட்டன.

இந்நிலையிலே மாணவர்களின் நலன் கருதி க.பொ.த. உயர்தரப் பரீட்சையைப் பிற்போடுவது குறித்து பரீட்சைகள் திணைக்களம் கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி வருகிறது.

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு 85 நாட்களின் பின்பே பரீட்சைகளை நடத்த வேண்டும் என யோசனையொன்று முன்வைக்கப்பட்டது. இந்நிலையிலேயே எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பரீட்சையை நடத்துவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டது. (ஐ-8)

## அசாத்சாலிக்கு தேவையான மெய்ப்பாதுகாவலர்களை வழங்கவும்

### மகிந்த தேசப்பிரிய பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை



(கொழும்பு)

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத்சாலிக்கு தேவையான மெய்ப்பாதுகாப்பாளர்களை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய பதில் பொலிஸ்மா அதிபரிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பாராளுமன்றத் தேர்தல் 2020 அரசியல்வாதிகள், முன்னாள் ஆளுநர்களுக்கான மெய்ப் பாதுகாப்பு அதிகாரிகளை நியமித்தல் எனும் தலைப்பில் பதில் பொலிஸ்மா அதிபர் சீ.டி. விக்ரமரத்னவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. முன்னாள் ஆளுநர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் தலைவராக செயற்படும் அசாத்சாலிக்கு வழங்கப்பட்டிருந்த மெய்ப் பாதுகாப்பு கடந்த 2019.11.30 ஆம் திகதியில் இருந்து நீக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முன்னாள் ஆளுநர்களுக்கு தற்போதும் மெய்ப்பாதுகாப்பாளர்கள் வழங்கப்படுகின்ற நிலையில், முன்னாள் ஆளுநரும் பாராளுமன்றத் தேர்தலில் தேசியப் பட்டியல் வேட்பாளரும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் தலைவருமான அசாத்சாலிக்குரிய மெய்ப் பாதுகாப்பாளர்களை நீக்கியமை உசிதமான காரியமல்ல என தேர்தல்கள் ஆணைக் குழு சுட்டிக்காட்டியே அவருக்கு மீண்டும்



போதுமான மெய்ப்பாதுகாப்பாளர்களை வழங்க வேண்டும்.

அவ்வாறு பாதுகாப்பு வழங்க முடியாது எனின் அது தொடர்பான காரணங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை அனுப்பி தேர்தல்கள் ஆணைக்குழுவை அறிவுறுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த கடிதத்தின் பிரதி ஒன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் அசாத்சாலிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## 5 ஆயிரம் ரூபாய் மோசடி; விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

கொரோனாத்தொற்று இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டதில் இடம்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாக கணக்காய்வாளர் நாயகம் **W.B.C.** விக்கிரமரத்ன தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இது தொடர்பில் 3 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.,

5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு விடயத்தில் ஏதேனும் முறைப்பாடுகள் காணப்படுமாயின், **www.auditorgeneral.gov.lk** எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து முறைப்பாடுகளை பதிவிட முடியும்.

முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் பிரதிக்கணக்காய்வாளர் நாயகத்தின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-8)

# தொண்டமான் முன்வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற நடவடிக்கை



(கண்டி)

மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மலையக மக்கள் தொடர்பில் முன்வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரத்தை பெற கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆறுமுகன் தொண்டமான் கடந்த 26 ஆம் திகதி பிரதமரை சந்தித்த போது மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

மலையக மக்களின் குடியிருப்பு தொடர்பிலான பரிந்துரையே காலஞ்சென்ற அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் பிரதமரிடம் கையளித்தார்.

மலையக மக்களின் குடியிருப்பு, பாடசாலை மற்றும் உட்கட்டமைப்பு பிரிவுகளில் காணப்படுகின்ற பிரச்சினைகள் குறித்த பரிந்துரையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## மாணவர்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று வியாழக்கிழமை அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சி.ஐ.டி. பணிப்பாளரின் நியமனத்தால் சிரேஷ்ட அதிகாரிகள் இடமாற்றம் கோரல்

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ், கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள நிலையில், அங்கு சேவையாற்றும் பல முக்கிய சிரேஷ்ட அதிகாரிகள் தமக்கு இடமாற்றம் வழங்குமாறு கோரியுள்ளதாக பொலிஸ் தலைமையக உள்ளகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

சி.ஐ.டியின் கணனி, டிஜிற்றல் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைப் பிரிவினை வழிநடத்தும் சிரேஷ்ட பெண் பொலிஸ் அத்தியட்சகர் தர்சிகா குமாரி, நிதிக் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகளை கையாளும் பிரிவுகளை வழிநடத்தும் (விசேடமாக மத்திய வங்கி பிணை முறி மோசடி) சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பியசேன அம்பாவல, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமால, விசேட விசாரணைப் பிரிவினை வழிநடத்தும் (மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் முக்கிய விவகாரங்களை விசாரிக்கும் பிரிவுகள்) பொலிஸ் அத்தியட்சகர் விக்ரமசேகர, பொலிஸ் அத்தியட்சகர் ஜயதிலக உள்ளிட்ட பலரே இவ்வாறு இடமாற்றம் கோரியுள்ளனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ் சேவை அடிப்படையில் தம்மை விட கனிஷ்டமானவர் எனவும், அவர் தாம் தாக்கல் செய்துள்ள வழக்கொன்றில் பிரதிவாதியும் கூட என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளதுடன் அவருக்கு கீழ் சேவையாற்றுவது சாத்தியமில்லை என்பதால் தம்மை வேறு இடங்களுக்கு இடமாற்றுமாறும் கோரியுள்ளனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் மனோஜ் ரணகல, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுரத்த பண்டாரநாயக்க ஆகியோருக்கு எதிராக சி.ஐ.டியில் தற்போது இடமாற்றம் கோரியுள்ள அதிகாரிகள் உட்பட பலர் ஒன்று சேர்ந்து உயர் நீதிமன்றில் வழக்கொன்றினை தாக்கல் செய்துள்ளனர்.

அது, உயர் நீதிமன்றின் உத்தரவொன்றினைத் தவறாக வரைவிலக்கணம் செய்து அதனை மையப்படுத்தி தேசிய பொலிஸ் ஆணைக் குழுவையும் ஏமாற்றி பதவி உயர்வு பெற்றுக் கொண்டதாகவே குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் பிரசன்ன அல்விஸை சி.ஐ.டியின் பணிப்பாளராக நியமித்துள்ளதால் அவரின் கீழ் சேவையாற்ற முடியாது எனக் கூறியே சிரேஷ்ட அதிகாரிகள் இடமாற்றம் கோரியுள்ளனர். (ஜ-4)

## தொண்டமானின் வெற்றிடத்திற்கு ஜீவன்


(கண்டி)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் திடீர் மறைவையடுத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் பட்டியலில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு ஜீவன் தொண்டமான் நியமிக்கப்பட்டுள்ளார் என்று இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஜ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2047

**சபேஷ்**



ஆவி 1: விஷம் குடிச்சு சாகப்போனேன் விஷத்தில கலப்படம், பிழைச்சுக்கிட்டேன்
ஆவி 2: அப்புறம் எப்பிடி செத்த?
ஆவி 1: காப்பாத்த மருந்து கொடுத்தாங்க... மருந்தில கலப்படம் செத்துட்டேன்

**முரளி**



ஏன்னே காலையிலேயே அவன போட்டு இந்த அடி அடிக்கிறீங்க...
பின்ன மொபைல பிளைட் மொட்ல வச்சு கீழபோட்டா பறக்குமான்னு கேட்கிறான்

**வான்மதி**



ஏன்டா பிறந்தவுடனே என்னைப் பார்த்து முறைக்கிற?
பின்ன என்னடா! நீ மாஸ்க் போட்டது மட்டுமில்லாம பிறந்த உடனேயே என்னையும் மாஸ்க் போட வைக்கப் போறியே

**விசாகா**




வாழ்க்கையில வடைபோச்சேன்னு நினைக்கிறதை விட வடையோட போச்சேன்னு யோசிக்கிறதுதான் புத்திசாலித்தனம்

**ராணி**



தேடிப்போகாதே அலட்சியப்படுத்தப்படுவாய்! எதிர்பார்க்காதே ஏமாற்றப்படுவாய்...! உன்னை மட்டும் நம்பு. நடிப்பு நிறைந்த உலகம் இது

**கணேஷ்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பாத யாத்திரை ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர் காமக்கந்தன் ஆலயத்தை நோக்கிய பாத யாத்திரை ஆரம்பிக்கப்பட்டது.

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நேற்று வியாழக்கிழமை காலை நடை பெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து, ஆலய கப்புறாளையால் யாத்தி ரைக்கு தலைமை தாங்கிச் செல்லும் அடியவரின் கையில் முருகப் பெருமானின் வேல் கையளிக்கப்பட்டது.

வேலினைப் பெற்றுக்கொண்ட அடிய வர்கள் கதிர்காமம் நோக்கிய பாத யாத் திரையை ஆரம்பித்தனர். இந்த யாத் திரைக்குழுவினர் எதிர்வரும் 4 ஆம் திகதி முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் நடைபெறும் விசேட பொங்கல் வழிபாட்டில் கலந்துகொள்வர்.

பின்னர் அங்கிருந்து கதிர்காமம் நோக்கிய யாத்திரை சுமார் 46 நாட்க ளின் பின் கதிர்காமக் கந்தனின் கொடி யேற்ற தினத்தன்று ஆலயத்தைச் சென்ற டையும். (2-5)

# தேர்தல்கள் ஆணைக்குழுவை பாதுகாத்தால் மாத்திரமே ஜனநாயகம் பாதுகாக்கப்படும்

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை யான காலப்பகுதிக்குள் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாட லின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரமே தேர்தல்கள் ஆணைக்குழு செய ற்பட வேண்டியுள்ளது. 70 நாட்கள் அவசி யம் என்பதையும் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு நீதிமன்றத்திற்கு அறிவித் துள்ளது.

எனவே, ஆணைக்குழுவின் நடவடிக் கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலேயே நாம் தற்போது செயற்பட வேண்டும்.

தேர்தல்கள் ஆணைக்குழுவைப் பாது காத்தால் மாத்திரமே நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்படும். தேர்தல்கள் ஆணைக் குழுவை தற்போது விமர்சிப்பவர்கள் எதிர் க்கட்சிக்குச் சென்ற பின்னர் அதன் தேவையை உணர்வார்கள்.

அரசியல் கட்சி என்ற வகையில் தற் போது நாம் தேர்தல்கள் ஆணைக்குழுவை பாதுகாக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## நெல்லியடி சந்தை திறப்பு

(நெல்லியடி)

மக்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிதாக அமைக்கப்பட்ட நெல்லியடி மரக்கறிச் சந்தையும் மீன் சந்தையும் எதிர்வரும் முதலாம் திகதி காலை 6 மணியளவில் திறந்து வைக்கப்பட்டு சந்தை நடவடிக்கைகள் இடம்பெறும் என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.ஐங்கரன் தெரி வித்தார்.

அத்துடன் பொதுமக்களையும் வியாபாரி களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்ப ற்றுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.(2-5-60)

## இரத்ததான முகாம்

(மன்னார்)

நானாட்டான் பிரதேச செயலகம் மற்றும் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியன நானா ட்டான் ப.நோ. கூ.சங்கத்தின் அனு சரணையுடன் நடத்தும் இரத்ததான முகாம் இன்று வெள்ளிக்கிழமை காலை நானாட்டான் பிரதேச செயல கத்தில் இடம்பெறும் என பிரதேச செயலாளர் மாணிக்கவாசகர் சிறீஸ் கந்தகுமார் தெரிவித்தார். (ஜ)

### பாரிய கப்பல்களில் பயன்படுத்தும்

## மிகப் பெரிய இரும்பு வங்காலைக் கடலில் மீட்பு

(மன்னார்)

கடலில் பயணத்தை மேற்கொள்ளும் கப்பலுக்கு பயன்படுத்தும் நங்கூரத்து டன் இணைக்கப்படும் மிகப் பெரிய இரும்பு மன்னார் வங்காலை கடலில் மீன வர்களினால் கண்டு பிடிக் கப்பட்டு நேற்று வியாழக் கிழமை பிற்பகல் வங்கா லைக்கடற்கரைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த மிகப் பெரிய இரும்பு வங்காலை கடலில் காணப்படுவதை அவதா னித்த மீனவர்கள் சக மீனவர்களின் உதவியுடன் படகில் கட்டி இழுத்து வங் காலை கடற்கரைக்கு கொண்டு வந்தனர். (ஜ-2-5-285)






சிதம்பரபுரம் ஆர்.கே. பவுண்டேசன் அமைப்பின் ஏற்பாட்டில் மறைந்த முன் னாள் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான ஆறுமுகன் தொண்டமானுக்கு வவுனியா வில் நேற்று அஞ்சலி செலுத் தப்பட்டது.

(படம்:- நெளுக்குளம் செய்தியாளர்)

# மகிந்தானந்தவிற்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மகிந் தானந்த அளுத்கமகே மற்றும் சதொச நிறுவனத்தின் முன் னாள் தலைவர் நளின் பெர்னா ண்டோ உள்ளிட்டவர்களுக்கு எதி ராக தாக்கல் செய்யப்பட்ட வழ க்கை அடுத்த மாதம் 15 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மூவரடங்கிய கொழும்பு உயர் நீதிமன்றம் தீர் மானித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது கரம்போட்கள் மற்றும் டாம் போட் களை இறக்குமதி செய்து அவ ற்றை விளையாட்டுச் சங்கங்களு க்கு பகிர்ந்தளித்ததன் மூலம் அரசாங்கத்திற்கு 53 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டதாக அவர் கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள் ளது.

இந்த வழக்கு ஆர்.குருசிங்க, சசி.மகேந்திரன் மற்றும் அமல் ராணராஜா ஆகிய மூன்று நீதிப திகள் அடங்கிய குழாம் முன் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது குறித்த வழக்கு ஒத்தி வைக்கப் பட்டது. (ஜ-4)

## ஊரடங்கை மீறிய 178 பேர் கைது

(கொழும்பு)

நாட்டில் அமுல்படுத்தப்பட்டு ள்ள ஊரடங்கு சட்டவிதி முறை களை மீறினார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் 178 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தி னால் நேற்று வெளியிடப்பட்டு ள்ள அறிக்கையிலேயே இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் நேற்று அதிகாலை 4 மணிவரை அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரட ங்கு காலப்பகுதியிலேயே இவர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், குறித்த காலப் பகுதிக்குள் 38 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி மாலை 6 மணி முதல் நேற்று அதிகாலை 4 மணிவரையான காலப்பகுதி யில் ஊரடங்கு விதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் இதுவரை 66 ஆயிரத்து 519 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என் பது குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## டெங்கு நோயைக் கட்டுப்படுத்த விசேட செயலணி உருவாக்கம்

(கொழும்பு)

டெங்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்காக விசேட செயலணி ஒன்று அமைக்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியா ராய்ச்சி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித் தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், டெங்கு நோயி லிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடனேயே குறித்த விசேட செயலணி அமைக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-8)

## கடற்படையினர் மூவருக்கு கொரோனா

(பனிக்கன்குளம்)

கேப்பாபிலவு விமானப்படை தளத்தில் தனிமைப்படுத்தலில் இருந்த மேலும் 3 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் உறு திப்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - கேப்பாபிலவு விமானப் படைத்தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கடற்படையினர் 15 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் உறு திப்படுத்தப்பட்டுள்ளதாக ஏற்க னவே அறிவிக்கப்பட்டிருந் தது.

இந்நிலையில் மேலும் 3 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொரோனாத்தொற்று இருப்பதாக இனங்காணப்பட்ட 3 கடற்படையினரும் வெலிகந்த வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஜ-2-281)



மன்னார் - கட்டுக்கரை குளத்தின் கீழான சிறுபோக நெற் செய்கைக்கான நீர் விநியோகம் நேற்று முன்தினம் புதன் கிழமை காலை மன்னார் மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.யோகராசா தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

(படம்: மன்னார் செய்தியாளர்)

# சுதந்திரத்திற்குப் பின் இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

04

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



ஆரம்பத்தில் இலங்கைச் சட்டவாக்கச்சபை (**Legislative Council of Ceylon, 1833-1931**) எனப் பெயர் பெற்று பின்னர் இலங்கை அரச சபை (**State Council of Ceylon, 1931-1947**). இலங்கைப் பாராளுமன்றம் (**Parliament of Ceylon 1947-1972**). அதன் பின்னர் தேசிய அரசு பேரவையாக (**National State Assembly, 1972-1978**) மாறி இப்போது இலங்கைப் பாராளுமன்றம் (**Parliament of Sri Lanka, 1978-present**) என அழைக்கப்படுகின்றது.

டொனமூர் அரசியல் சீர்திருத்த விசாரணைக் குழுவின் சிபார்சின்படி, 1931 ஆம் ஆண்டில் இலங்கை மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. டொனமூர் அரசியலமைப்பு 1931 ஜூன் முதல் 1947 ஓகஸ்ட் வரை நடைமுறையில் இருந்த காலப்பகுதியில் 1931 ஜூன் மாதத்திலும் 1936 மார்ச் மாதத்திலும் இரண்டு பொதுத்தேர்தல்கள் நடைபெற்றன. இரண்டாம் உலகப் போர் காரணமாக 1941 இல் நடைபெற வேண்டிய பொதுத்தேர்தல்கள் கைவிடப்பட்டன. 1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. இலங்கை முழுமையான விடுதலை பெறவில்லை, பதிலாக டொமினியன் அந்தஸ்தையே பெற்றது. நாட்டின் இராணுவ நிலைகள் பிரித்தானியாவின் கீழேயே இருந்தன. நாட்டின் அதிகாரபூர்வ மொழியாக ஆங்கிலமே தொடர்ந்து இருந்து வந்தது.

### இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1947

இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் 1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 23 முதல் செப்டெம்பர் 20 வரை நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு 95 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது.

சுதந்திர இலங்கையின் முதலாவது தேசிய தேர்தல் இதுவாகும். பிரித்தானியா இலங்கைக்கு விடுதலை வழங்கப்பட முன்னரேயே இத்தேர்தல் நடைபெற்றது. இதுவே சோல்பரி அரசியலமைப்பின் கீழ் நடத்தப்பட்ட முதலாவது தேர்தல் ஆகும்.

இத்தேர்தல் 1947ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23, 25, 26, 27, 28, 30 மற்றும் செப்டெம்பர் மாதம் 1, 4, 6, 8, 9, 10, 11, 13, 15, 16, 17, 18, 20ஆம் திகதிகளில் (மொத்தம் 19 நாட்கள்) நடைபெற்றது. 9 அரசியற் கட்சிகளின் சார்பாக 179 பேரும், 182 சுயேட்சை வேட்பாளர்களுமாக மொத்தம் 361 பேர் போட்டியிட்டனர்.

பிரித்தானியா இலங்கையில் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த பல முக்கிய அரசியல் தலைவர்கள் இத்தேர்தலில் பங்கெடுத்தனர். டி. எஸ். சேனநாயக்க தலைமையிலான வலதுசாரிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி முக்கிய கட்சியாக இருந்தது. எதிரணியில் திரொட்ஸ்கி லங்கா சமசமாஜகட்சியும் (**Trotskyist Lanka Sama Samaja Party**), இந்திய போல்ஷிவிக் லெனினிச கட்சி, (**Bolshevik Leninist Party of India**) இலங்கை பொதுவுடைமைக் கட்சி, இலங்கை இந்தியக் காங்கிரஸ், மற்றும் பல சுயேட்சை வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வட, கிழக்கு மாகாணங்களில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் போட்டியிட்டது. புத்தளம் தொகுதியில் எஸ். எச். எம். இஸ்மாயில் (ஐ.தே.க) போட்டியின்றித் தெரிவானதால், 94 இடங்களுக்கு மட்டுமே தேர்தல் நடைபெற்றது. இவற்றில் கொழும்பு மத்தி, அம்பலாங்கொடை, கடுகண்ணாவை, பதுளை, பலாங்கொடை ஆகியவை பல உறுப்பினர்கள் கொண்ட தொகுதிகள். இவ்விடங்களில் இருந்து மொத்தம் 11 பேர் தெரிவானார்கள்.

டி.எஸ். சேனநாயக்கவின் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் பெரும்பான்மைப் பலம் பெறவில்லை. ஆனால் தமிழ்ப் பிராந்தியங்களில் பெரும்பாலான இடங்களை கைப்பற்றிய அனைத்து இலங்கை தமிழ் காங்கிரஸுடன் கூட்டாக ஒரு அரசாங்கத்தை உருவாக்கியது. எதிர்க்கட்சித் தலைவராக டாக்டர்.என்.எம். பெரேரா பதவியேற்றார்.

பாராளுமன்றத் தேர்தல் 1947

| | வேட்பாளர்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| A-போட்டியிட்டோர்<br>B- தெரிவு செய்யப்பட்டோர்<br>C- தோல்வி அடைந்தோர்<br>D- போடப்பட்ட மொத்த வாக்குகள் | A | B | C | D | % |
| ஐக்கிய தேசிய கட்சி | 98 | 42 | 56 | 751,432 | 39.81% |
| லங்கா சமசமாஜகட்சி | 28 | 10 | 18 | 204,020 | 10.81% |
| இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | 9 | 7 | 2 | 82,499 | 4.37% |
| இலங்கை இந்தியா காங்கிரஸ் | 7 | 6 | 1 | 72,230 | 3.83% |
| பொலசெவிக் லெனினிஸ்ட் கட்சி | 10 | 5 | 5 | 113,193 | 6.00% |
| கம்யூனிஸ்ட் கட்சி | 13 | 3 | 10 | 70,331 | 3.73% |
| தொழிற்கட்சி | 9 | 1 | 8 | 38,932 | 2.06% |
| ஐக்கிய லங்கா காங்கிரஸ் | 2 | 0 | 2 | 3,953 | 0.21% |
| ஸ்வராஜ் கட்சி | 3 | 0 | 3 | 1,393 | 0.07% |
| சுயேட்சை | 181 | 21 | 160 | 549,381 | 29.11% |
| மொத்தம் | 360 | 95 | 265 | 1,887,364 | |

**முதலாவது பாராளுமன்றம் (பிரதிநிதிகள் சபை)**
**14 ஒக்டோபர் 1947-08 ஏப்ரல் 1952**

பிரதமர் டி.எஸ். சேனநாயக்க



பிரதமர் டட்லி சேனநாயக்க



எதிர்க்கட்சித் தலைவர் கலாநிதி என்.எம். பெரேரா



சபாநாயகர் சேர். பிரான்சிஸ் மொலமுறே



சபாநாயகர் சேர்.பிரான்சிஸ் மொலமுறேயின் இறப்பினையடுத்து சேர் அல்பேட் எஃப் பீரிஸ் 13 பெப்ரவரி 1951இல் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க குதிரையிலிருந்து விழுந்து மரணமடைந்ததையடுத்து அவரின் மகன் டட்லி சேனநாயக்க இலங்கையின் இரண்டாவது பிரதமராக 1952ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் திகதி பதவியேற்றுக் கொண்டார். டட்லி சேனநாயக்க பதவியேற்று சரியாக 17 நாட்களின் பின் அதாவது 1952ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் பிரதமர் டட்லி சேன நாயக்கவினால் கலைக்கப்பட்டது.

### இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1952

இலங்கையின் 2ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1952 மே 24 முதல் மே 30 வரை நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு 95 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் பிரதமருமான டி. எஸ். சேனநாயக்க மார்ச் 1952 இல் இறந்ததை அடுத்து அவரது மகன் டட்லி சேனநாயக்க கட்சித் தலைவராகவும், இடைக்காலப் பிரதமரும் ஆனார். இலங்கையின் முதல் பிரதமருக்கான தேசிய துக்க அலை ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கை பெரிதும் உயர்த்தியது. ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்த சிங்களத் தேசியவாதிகளால் உருவாக்கப்பட்ட இலங்கை சுதந்திரக்கட்சி இத்தேர்தலில் முதல் தடவையாகப் போட்டியிட்டது. இதேபோல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டதனால் அக்கட்சியில் இருந்து எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் பிரிந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியினரும் முதல் தடவையாகப் போட்டியிட்டனர்.

இலங்கையின் மலையகத் தமிழரின் குடியுரிமை பறிக்கப்பட்டமையினால் அவர்களின் ஒரேயொரு அரசியல் கட்சியான இலங்கை இந்தியக் காங்கிரஸ் இத்தேர்தலில் போட்டியிட முடியவில்லை. லங்கா சமசமாஜக் கட்சியினர் இத்தேர்தலில் 9 இடங்களையே பெற்றுத் தோல்வியுற்றனர். ஐ.தே.க. பெரும்பான்மையிடங்களைக் கைப்பற்றியது. டட்லி சேனநாயக்க இலங்கையின் இரண்டாவது பாராளுமன்றத்தின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார். எதிர்க்கட்சித் தலைவராக எஸ்.டப்ளியூ.ஆர்.டி பண்டாரநாயக்க தெரிவு செய்யப்பட்டார்.

1953ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் அரசாங்கத்திற்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர எதிர்க்கட்சிகள் ஆயத்தப்படுத்தி பாராளுமன்றத்தினுள்ளும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்ததால் பிரதமர் டட்லி சேனாநாயக்க 1953ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி பதவி விலகினார்.

(தொடரும்)

# கொரோனா ஒழிப்பிற்கான ஒத்துழைப்பை டெங்கு ஒழிப்பிற்கும் வழங்குங்கள்

## மக்களிடம் சுகாதார அமைச்சர் பவித்திரா வேண்டுகோள்

(கொழும்பு)

**இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்குநோயால் 20 பேர் உயிரிழந்ததுடன் 19 ஆயிரத்து 446 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் கொரோனா ஒழிப்பிற்கு நாட்டு மக்கள் வழங்கிய ஒத்துழைப்பை டெங்கு ஒழிப்பிற்கும் வழங்க வேண்டுமெனவும் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி கோரிக்கை விடுத்தார்.**

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான கால நிலை காரணமாக டெங்கு நோய் மீண்டும் தலை தூக்கியுள்ளது. இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 19 ஆயிரத்து 446 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.



அவர்களில் இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த மாதத்தின் இதுவரையான காலப் பகுதியில் 457 பேர் டெங்கு நோயாளர்களாகப் பதிவாகியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. எனவே நாட்டு மக்கள் டெங்கு ஒழிப்பிற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அவர் மேலும் கோரிக்கை விடுத்தார். (ஜ-8)

# இடுகம கொவிட்-19 நிதிய மீதி 1,182 மில்லியனாக அதிகரிப்பு



(கொழும்பு)

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் இடுகம கொவிட் -19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 1,182 மில்லியனாக அதிகரித்துள்ளது.

சங்கைக்குரிய எல்லாவல மேதானந்த தேரர் ஒரு இலட்சம் ரூபாவையும் பிலியந்தலை ஹெடிகம, ஸ்ரீ சுதர்ஷனாராமாதிபதி சங்கைக்குரிய நாகியாதெனியே பேமரத்ன தேரர் ஒரு இலட்சம் ரூபாவையும் பிலியந்தலை வேவல, உத்யோகிபுர, ஸ்ரீ விஜயாராமாதிபதி மேல் மாகாண தலைமை சங்கநாயக்க தேரர் சங்கைக்குரிய வேபன இரஹேமாலோக நாயக தேரர் ஒரு இலட்சம் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளனர். நிவிதிகல சாசனப் பாதுகாப்பு சபை அன்பளிப்பு செய்த ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவை சங்கைக்குரிய கோங்பிடியே சுசீல தேரர் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்ததுடன், அதற்கான காசோலை தேரரினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

Siam City Cement (Lanka) ltd நிறுவம் அன்பளிப்பு செய்த 5 மில்லியன் ரூபாவையும் பாணந்துறை பிரதேச சபை நிதியத்திலிருந்தும் உறுப்பினர்களின் பங்களிப்பிலிருந்தும் வழங்கப்பட்ட 7 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவுக்கான காசோலை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

NSBM ( National School of Business Management) நிறுவனம் 10 மில்லியன் ரூபாவை நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளதுடன், அதற்கான காசோலை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

தபால் திணைக்கள பணிக்குழாமினரின் அன்பளிப்புடன் 20 மில்லியன் ரூபாவும் இலங்கை மன்ற பணிக்குழாம் அன்பளிப்புடன் 2 இலட்சத்து 27 ஆயிரத்து 453 ரூபாவும் நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த காசோலைகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

பேண்தகு அபிவிருத்தி, வன ஜீவராசிகள் அமைச்சு பணிக்குழாம் ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 743 ரூபாவையும் வனப் பாதுகாப்பு திணைக்களப் பணிக்குழாம் 18 இலட்சத்து 32 ஆயிரத்து 535 ரூபாவையும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களப் பணிக்குழாம் 15 இலட்சத்து 89 ஆயிரத்து 189 ரூபாவையும் தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களப் பணிக்குழாம் 7 இலட்சத்து 46 ஆயிரத்து 888 ரூபாவையும் தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களப் பணிக்குழாம் 4 இலட்சத்து 10 ஆயிரத்து 757 ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளதுடன், அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவால் குறித்த காசோலை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

வெல்பல்ல, ரத்தலான - நாகம பண்டைய விகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய பிபிலதெனியே தம்மப்பிய தேரர் ஒரு இலட்சம் ரூபாவையும் South Asia Gateway Terminals தனியார் நிறுவனம் 22 இலட்சத்து 25 ஆயிரத்து 982 ரூபாவையும் மாவனல்லை Ceylon Experts Recruitment @ Travel நிறுவனம் ஒரு இலட்சம் ரூபாவையும் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனம் ஒரு மில்லியன் ரூபாவையும் Spin Riders நிறுவனம் ஒரு இலட்சத்து 5 ஆயிரம் ரூபாவையும் கொழும்பு 8 ஐ சேர்ந்த திருமதி Aban Pestonjee ஒரு இலட்சம் ரூபாவையும் ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இடுகம கொவிட் -19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் தற்போதைய மீதி 1,182 மில்லியன் ரூபாவாகும். (ஜ-4-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எது மகிழ்ச்சி?

"அவருக்கு என்ன சேர்...கொடுத்து வைத்த மனுசன்" என்று ஒருத்தரை சுட்டிக்காட்டிச் சொன்னார் ஒரு நண்பர்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன். "சொந்தமாக ஒரு கார் வைத்திருக்கிறார். அழகான பங்களா கட்டியிருக்கிறார். பின்பு என்ன குறைச்சல் சந்தோசத்துக்கு?" என்றார்.

அவர் நினைக்கிறது மாதிரித்தான் நம்மிலே பலபேர் நினைக்கிறோம்.

ஆனால் பெரியவர்களெல்லாம் (ஓஷோ) அப்படி நினைக்கவில்லை. நாமெல்லாம் எப்படியென்றால்? ஒரு அழகான வீட்டிலே இருக்கிறோம். அது நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறது. ஒரு அழகான காரிலே போகிறோம். அது ஏற்படுத்துகிற ஒலியே நம்மைப் பரவசப்படுத்துகிறது. அதனாலே என்ன நினைக்கிறோம்?

நம்முடைய உண்மையான மகிழ்ச்சிக்கு இந்த வீடு தான் காரணம், கார்தான் காரணம் என்று நினைக்கிறோம். ஆனால் உண்மையிலே அப்படி இல்லை.

இந்த வீடும், காரும் நம்முடைய மகிழ்ச்சிக்கு ஒரு தூண்டுகோல் அவ்வளவுதான். இந்தப் புறப் பொருட்கள் இல்லாமலேயே கூட எல்லையற்ற ஆனந்தத்திலே நாம் மூழ்க முடியும்.

அதைப் புரிந்து கொள்ளாமல் வீடு, கார், நிலம், புகழ், பதவி இப்படி உலகப் பொருட்களைச் சேகரிக்கிறதிலேயே நம்முடைய சக்தியை வீணாக்குகிறோம். நமக்குள்ளே ஒரு விழிப்பு ஏற்படுகிறபோது நாம் சேகரித்த பொருட்கள் நமக்குச் சுமையாகவே இருக்கும். அதையெல்லாம் பாதுகாக்கிறதுக்கே நமக்கு நேரம் சரியாக இருக்கும்.

இதுக்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? இந்த உலகத்திலே எது எது எல்லாம் நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்குதோ அதையெல்லாம் நாம் நமக்கு உடைமையாக ஆக்குவதற்கு ஆசைப்படுகிறோம். அனுபவப்பட்டவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்...

"எந்தப் பொருள் மீதும் பற்று வைக்காதீர்கள், ஆசை வைக்காதீர்கள். ஆனால் அவைகளைளெல்லாம் வெறுமனவே உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். அவைகளெல்லாமே உங்களுடைய சௌகரியத்துக்காக ஏற்பட்டவை அவ்வளவுதான்!" என்கிறார். இன்னொரு விடயத்தையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது மாதிரியான அறிவுரைகளைச் சும்மா கேட்டுக்கொண்டு இருப்பதனாலேயோ அல்லது இவைகளை ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதனாலேயோ எந்தப் பயனும் கிடையாது.

இவைகளை எல்லாம் நாம் அனுபவித்துக்கொண்டு வர வேண்டும். அப்பொழுதுதான் அது நமக்கு உபயோகப்படும். அனுபவமற்ற அறிவு எதற்கும் உபயோகப்படாது. இதெல்லாம் பெரியவர்கள் சொல்லுகின்ற கருத்து. அவர்களுக்கு என்ன சுலபமாகச் சொல்லிவிட்டு போய்விடுவார்கள் எல்லாவற்றையும்!

"மரணம் வாழ்வுக்கு எதிரியல்ல!" என்கிறார்கள். அதற்காக அதனைக் கண்டு பயப்படாமல் நம்மாலே இருக்க முடியாதா? அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்..."மரணம் என்பது வாழ்விற்கு எதிரியல்ல. உண்மையில் வாழ்விலே தான் மரணமும் அடங்கியிருக்கிறது. மரணம் இல்லாமலே வாழ்வு முழுமை பெறாது. மரணம்தான் வாழ்வுக்கு ஆதாரம். வாழ்வின் கவர்ச்சிக்கும் ஆனந்தத்திற்கும் ஆவலிற்கும் மரணம்தான் ஆதாரம். கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள் புரியும்" என்கிறார்கள்.

அதை நினைத்தாலே பயமாக இருக்கிறது. பின்பு எங்கே சிந்திப்பது? அதையெல்லாம் விடுங்க சேர். இப்ப நம்ம கதைக்கு வருவோம்.

ஒரு வீதியிலே திடீரென்று ஒரு விபத்து. கார் ஒரு ஆளை மோதிவிட்டது. அடிபட்டவன் கீழே விழுந்து விட்டான். கும்பல் கூடிப்போய் விட்டது. ஒரு அம்மா ஓடிச் சென்று அடிபட்டவன் அருகே சென்றார் உதவுவதற்காக. அதற்குள்ளே இன்னொரு ஆள் ஓடி வந்து அந்த அம்மாவை விலகி நிற்கச் சொல்லிவிட்டு அடிபட்டவன் அருகே அவர் உட்கார்ந்தார். எனக்கு முதலுதவி செய்யத் தெரியும். First Aid படித்திருக்கிறேன். எல்லோரும் விலகி நில்லுங்கள் என்று சொல்லிவிட்டு அந்த ஆளுக்கு முதலுதவி சிகிச்சைகளை செய்ய ஆரம்பித்தான்.

அந்த அம்மா அவனைப் பார்த்து "இதோ பாரப்பா உன்னுடைய முதலுதவி சிகிச்சை எல்லாம் முடித்து வைத்தியரிடம் கொண்டு போகலாம் என்ற கட்டத்திலே என்னிடம் சொல்!" என்றார். "ஏன்?" என்று கேட்டான் அவன். "நான் தான் வைத்தியர்!" என்றார் அந்த அம்மா.

மௌனத்தின் பலன் பிரார்த்தனை;
பிரார்த்தனையின் பலன் நம்பிக்கை;
நம்பிக்கையின் பலன் அன்பு. – *அன்னை திரேசா*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆலய தரிசனத்துக்கு ஓரளவேனும் சந்தர்ப்பம் கொடுங்கள்

கொரோனா தொற்றுப் பரவாமல் இருப்பதற்கான அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவது கட்டாயமானது.

எனினும் சிலர் முகக் கவசம் அணியாமல் செல்வதை அவதானிக்க முடிகிறது.

கொரோனா பற்றிய பயம் சுனைக்கெட்டுப் போனதன் காரணமாக இவ்வாறான கவனக் குறைவுகள் ஏற்படுவது வழக்கம்.

ஆகையால் இது தொடர்பில் ஞாபகமூட்டுவதற்கும் அறிவுரைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, ஆலயங்கள், தேவாலயங்கள், பௌத்த விகாரைகள், பள்ளிவாசல்கள் என வழிபாட்டுத் தலங்கள் தொடர்ச்சியாகப் பூட்டப்பட்ட நிலையில் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

கொரோனாத் தொற்று ஏற்படாமல் இருப்பதற்காக இத்தகைய நடைமுறைகள் பின்பற்றப்பட்டாலும் தொடர்ச்சியாக வழிபாட்டுத் தலங்களைப் பூட்டி வைத்திருப்பது என்பது பலருக்கு மன ரீதியான கஷ்டத்தைக் கொடுக்கவே செய்யும்.

பொதுவில் ஆலய வழிபாட்டை தமது நாளாந்த செயற்பாடாகக் கொண்டவர்கள் நிறையவே உளர்.

உதாரணத்துக்கு நாள்தோறும் அதிகாலைப் பொழுதில் நல்லூர் முருகனைத் தரிசிக்காமல், அவன் திருவீதியைச் சுற்றி வலம் வந்து முகப்பில் நின்று முருகா என்று கும்பிடாமல் தேநீர் கூடப் பருகுவதில்லை என்ற உறுதியோடு இருக்கக்கூடியவர்கள் பலர் உண்டு.

இதுபோல தேவாலயத்துக்குச் செல்லாவிட்டால் அது மனக்குறைவாக இருக்கும் என்ற உணர்வோடு நாள்தோறும் தேவாலயம் சென்று தரிசிப்பவர்கள் உள்ளனர்.

இவ்வாறு எல்லாச் சமயங்களிலும் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லுகின்ற நடைமுறைகளைத் தினசரி பின்பற்றுபவர்கள் இருக்கவே செய்வர்.

இத்தகையவர்களுக்கு கொரோனா காலம் என்பது மிகப்பெரிய மனக் கஷ்ரத்தைக் கொடுக்கவே செய்யும்.

எனவே கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுவதென்பதுடன் ஆலய வழிபாடுகளை ஆற்றுவதற்கும் ஏற்பாடுகளைச் செய்வது கட்டாயமானது.

அதிலும் தொடர்ச்சியாக வெளியில் வர முடியவில்லையே என்ற ஏக்கத்துடன் இருப்பவ்ர்களின் மனநிலை அறிந்து அதற்கேற்றாற் போல் சில ஏற்பாடுகளைச் செய்வதும் கட்டாயமானதாகும்.

இதில் மிக முக்கியமானது ஆலய வழிபாடும் உறவுகளைச் சந்திப்பதுமான விடயமாகும்.

மேற்குறித்த இரண்டு விடயத்தையும் முதன்மைப்படுத்தி அதற்கான சந்தர்ப்பத்தை வழங்காவிட்டால்,

அது மனரீதியான பாதிப்புக்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்படுத்தவே செய்யும் என்பதால், இது விடயத்தில் அதீத கவனம் செலுத்துவது அவசியமாகும்.

# கோமாளிகள் கூட்டத்தின் தலைவரே சஜித்

## மகிந்த அணி சாடல்

(கொழும்பு)

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ கோமாளிகள் கூட்டத்தின் தலைவராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கின்றார் என மகிந்த அணியினர் சாடியுள்ளனர்.

சஜித் பிரேமதாஸவும் அவருடன் இணைந்திருக்கும் சகாக்களும் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டு வருகின்றனர். கனவான் அரசியலுக்குப் பதிலாக குரோத அரசியல் செய்வதிலேயே அத்தரப்பினர் ஆர்வம் செலுத்துகின்றனர் எனவும் மகிந்த அணியினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மகிந்த அணியின் முக்கியஸ்தர்களான பந்துல குணவர்த்தன, கெஹலிய ரம்புக்வெல ஆகியோர் சஜித் அணியைக கடுமையாக விமர்சிததுள்ளனர்.

பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் அவரது தரப்பினரும் நடந்துகொள்ள வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின அரசியல் மாணவனாக சஜித்தைக் காண முடியாதுளளது. இன்று அவர் கோமாளிகள் கூட்டத்தின் தலைவராகத் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டிருக்கின்றார் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (ஜ-4)

## குணமடைந்தோர் 745

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த மேலும் 13 பேர் பூரணமாக குணமடைந்துள்ளனர்.இதற்கமைய இது வரை 745 பேர் முழுமையாக குணமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இது வரை ஆயிரத்து 469 பேர் இலங்கையில் கொரோனா நோயாளிகளாக அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 10 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 714 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ஜ)

## பொதுத்தேர்தல் திகதி தொடர்பான விசாரணை மீண்டும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஜூன் மாதம் 20 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் இன்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவர் அடங்கிய நீதிபதி குழாம் முன்னிலையில் குறித்த விசாரணைகள் நேற்று எட்டாவது நாளாகவும் இடம்பெறறமை குறிப்பிடத்தக்கது. (ஜ-5)

## குழந்தைகளுக்கு முகக்கவசம் அணியாதீர்கள்

### சுகாதாரப் பிரிவு ஆலோசனை

(கொழும்பு)

இரண்டு வயதுக்கும் குறைவான பிள்ளைகளுக்கு முகக்கவசம் அணிவதை தவிர்க்குமாறு சுகாதாரப் பிரிவு ஆலோசனை வழங்கியுள்ளது.

கொரோனா பரவலைத் தடுப்பது குறித்த சுகாதார அமைச்சு 46 வகையான ஆலோசனைகளை நேற்று வெளியிட்டுள்ளது.

குறித்த ஆலோசனைகளிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுவாசக் கோளாறு ஏற்படுவது தொடர்பாக இவ்வாறு 2 வயதுக்கு குறைவான பிள்ளைகளுக்கு முகக்கவசம் அணிவதனை தவிர்க்குமாறு அதில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### குருவே இலக்கு

குரு என்பவர் விவேக ஞானமும் அன்பும் அன்றி வேறொன்றுமில்லை.

குரு அடிப்படை மூலமான விவேக ஞானமும் அன்பும் ஆவார். ஆத்ம ஞானத்தையடையும் பாதையிலுள்ள ஒவ்வொருவரிடமும் அவை விழித்தெழச் செய்யப்படுகின்றன. யாருடைய வாழ்விற்கும் விவேகத்திற்கும் அன்பிற்கும் இடையே இடைவெளி இல்லையோ, அவரைத்தான் நீ குரு என்று அழைக்கிறாய்.

பெரும்பாலும் நாம் விவேகத்தைக் கண்டு கொள்கிறோம். ஆனால் விவேகத்திற்கும் வாழ்க்கைக்கும் இடையே இடைவெளியைக் காண்கின்றோம். சீடனாக ஆவதன் நோக்கமே இந்த இடைவெளிக்குப் பாலம் அமைப்பதுதான்.

குருவுடன் இருப்பது என்றால் முயற்சி ஏதுமின்றி மிக இயல்பாக வாழ்க்கையையும் விவேகத்தையும் ஒன்று படுத்தலாகும்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பரா மரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** மாகியப்பிட்டி, அளவெட்டி, சண்டிலிப்பாய் வடக்கு, நாகாகோவல், மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி, உடுத்துறை, வெற்றிலைக் கேணி, ஆழியவளை, வத்திராயன், கடடைக்காடு, கேவில், முள்ளியான், வடமராட்சி கிழக்கு கடற்றொழில் கூட்டுத் தாபனம், 55 ஆவது இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** துட்டுவாகை பிரதேசத்திலும்

**மன்னார் பிரதேசத்தில்** சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் **Palmyrah House,** கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, **Palmyrah House** கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, **New Silk Road, Timex** ஆடைத் தொழிற்சாலை, **Industrial Estate,** மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களி லும் மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**திருமண பந்தம் புனிதமானது. அதை நிரந்தரமாகப் பாதுகாப்பதே மனித நாகரிகம். விவாகரத்து செய்யும் விடயத்தில் யாரும் அவசரப்படக்கூடாது. -பாரதியார்**

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

**"இல்லாது தோன்றாது, உள்ளது சிதையாது" என்பது சத்காரிய போதம். ஆகவே ஆன்மாவில் இல்லாத அறிவு நூதனமாகத் தோன்றுவ தில்லை.**

**எனவே படித்தால் அறிவு வராது என்பது முடிந்த முடிவு. படித்தால் அறியாமை தேயும்- உள்ள அறிவு வெளிப்படும்.**

**"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி- மாந்தர்க்குக்**
**கற்றனைத்து ஊறும் அறிவு"** (தொடரும்)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்


### நலன் தரும் திதிகளும் அவற்றின் பலன்களும்

**அமாவாசை திதி :** அமாவாசை திதிக்கு சிவன், சக்தி ஆகிய இருவரும் அதிதேவதை ஆவார்கள். பித்ருக்களுக்கு ஆற்றவேண்டிய கடன்களை, வழிபாடுகளை செய்யலாம். தான- தர்ம காரியங்கள் செய்ய உகந்த திதி . ஈடுபடலாம். இயந்திரம் சம்பந்தமான அனைத்து காரியங்களையும் தொடங்கலாம்.

பொதுவாக திதிகளில் வளர்பிறை துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகியவை சிறந்த திதிகளாகும். தேய்பிறை காலத்தில் வருகிற துவிதியை, திருதியை, பஞ்சமி ஆகிய மூன்று திதிகளும் சுப திதிகள் ஆகும். தேய்பிறை காலத்தில் இந்த மூன்று திதிகளில் மட்டும் சுப காரியங்களில் ஈடுபடலாம். (முற்றும்)

# இந்தியா - சீனா பஞ்சாயத்தில் தலைவராகச் செயற்படத்தயார்

## அமெரிக்கா அறிவிப்பு



(வோஷிங்டன்)

இந்தியா - சீனா எல்லைப் பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

அருணாசல பிரதேசத்தை முழுவதுமாக சொந்தம் கொண்டாடும் சீனா, லடாக்கின் சில பகுதிகளையும் சொந்தம் கொண்டாடி வருகிறது. அதனால்தான் லடாக்கை யூனியன் பிரதேசமாக இந்தியா அறிவித்த போது அதற்கு சீனா எதிர்ப்புத்தெரிவித்தது.

இந்நிலையில், எல்லைப் பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளுக்கிடையே மத்தியஸ்தம் செய்ய அமெரிக்கா தயாராக உள்ளதாக ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். இதுபற்றி இருநாடுகளிடம் தகவல் தெரிவித்திருப்பதாகவும் அவர் அப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே, காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா, பாகிஸ்தான் இடையே மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருப்பதாக ட்ரம்ப் தெரிவித்து வந்தார். ஆனால், காஷ்மீர் விவகாரம் இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினை என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-5)

# வைத்தியசாலையில் தீ விபத்து; 5 கொரோனா நோயாளிகள் பலி



(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் உள்ள வைத்தியசாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் ஐந்து கொரோனா வைரஸ் நோயாளிகள் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் யுனைடெட் வைத்தியசாலையின் தற்காலிக தனிமைப்படுத்தும் பிரிவிலேயே நேற்று முன்தினம் இரவு இந்த தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் நான்கு ஆண்கள் மற்றும் ஒரு பெண் அடங்குவதாகவும், இவர்கள் 45 முதல் 75 வயதுடையவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், ஒரு மணி நேர போராட்டத்திற்கு பிறகு தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக தீயணைப்புப் படையினர் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், இது குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(2-5)

## சீரற்ற காலநிலை காரணமாக விண்வெளிக்கான பயணம் தடைப்பட்டது

(வோஷிங்டன்)

சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு வீரர்களை அனுப்பும் நடவடிக்கை சீரற்ற வானிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டதாக நாசா நிறுவனம் அறிவித்தது.

நாசாவைச் சேர்ந்த இரண்டு விண்வெளி வீரர்கள் நேற்று அதிகாலை சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு அனுப்பப்படவிருந்த நிலையில் சீரற்ற வானிலை காரணமாக நாசா விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு அனுப்பி வைக்கும் செயற்பாடு ஒத்தி வைக்கப்பட்டது. இதேவேளை குறித்த ரொக்கெட் விண்வெளி வீரர்களுடன் நாளை சனிக்கிழமை விண்ணில் ஏவப்படும் என நாசா நிறுவனம் அறிவித்துள்ளது.(2-5-8)

# பதற்ற நிலையில் இந்தியா-சீனா எல்லை போர் வெடிக்குமா?

(பீஜிங்)

உலகமே கொரோனாவால் போராடிக் கொண்டிருக்கும் நிலையில், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் போருக்குத் தயார் நிலையில் இருக்கும்படி தனது இராணுவத்தினருக்கு கட்டளையிட்டுள்ளார்.

உலகம் முழுவதும் மூன்றரை இலட்சம் பேரை பலி கொண்டுள்ள கொரோனா வைரஸிற்கு சீனாதான் காரணம் என்று அமெரிக்கா பகிரங்க குற்றம் சாட்டியுள்ளது.

இதையடுத்து சீனாவுக்கும் அமெரிக்காவுக்குமான சொற் போர் வலுத்துள்ளது. இன்னொரு புறம் இந்திய எல்லையில் சீனா தனது படைகளைக் குவித்திருப்பதால் இந்தியாவும் படைப் பலத்தை அதிகரித்து வருகிறது.

இதனால் லடாக் எல்லைக் கோடு அருகே கடந்த 22 நாட்களாக பதற்றநிலை நீடித்து வருகிறது. சீனப்படைகளும் இதுவரை பின்வாங்குவதாகத் தெரியவில்லை.

கொரோனா வைரஸால் உலகமே ஆழ்ப்போயிருக்கும் நிலையிலும் படைகளை தயார் நிலையில் இருக்கும்படி சீன ஜனாதிபதி ஜின்பிங் கட்டளையிட்டுள்ளார்.

சீன ஜனாதிபதி மக்கள் விடுதலை இராணுவத்தின் கூட்டத்தில் உரையாற்றும் போது இராணுவத்தை பலப்படுத்தி போருக்குத் தயாராக இருக்கும்படி கூறியதாக சீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (2-5)

# ஏவுகணைத் தாக்குதலில் ஏழு பேர் உயிரிழப்பு

(சனா)

ஏமனில் உள்ள ஹவுதி போராளிகள் கடந்த செவ்வாய்க்கிழமை தலைநகர் சனாவின் வடகிழக்கில் மரிப் மாகாணத்தில் உள்ள சவுதி ஆதரவு அரசாங்கத்தின் இராணுவத் தளத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில், தலைமைத் தளபதியின் உறவினர்கள் உட்பட 7 பேர் கொல்லப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈரானுடைய ஆதரவு பெற்ற ஹவுதி போராளிகளை எதிர்த்துப் போராடும் சவுதி தலைமையிலான கூட்டணி, கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதி அன்று ஒரு மாத கால போர் நிறுத்த ஒப்பந்தத்தை அறிவித்தது. ஒரு மாதம் முடிவடைந்த நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும், தற்போது ஹவுதி இத்தாக்குதலுக்கு பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-5)

## 86 மில்லியன் சிறுவர்கள் பாதிப்படைவர் யுனிசெவ் நிறுவனம் சுட்டிக்காட்டு

(நியூயோர்க்)

2020 ஆம் ஆண்டு நிறைவடையும் போது உலகில் சுமார் 86 மில்லியன் சிறுவர்கள் வறுமை உட்பட பல காரணங்களால் பாதிக்கப்படுவார்கள் என யுனிசெவ் நிறுவனம் தெரிவித்தது.

கொரோனாத்தொற்று காரணமாக பல்வேறு நாடுகளும் வீழ்ச்சியைச் சந்தித்து வருகின்றன.

அந்நாடுகள் தமது பொருளாதார நிலையை மீளக் கட்டியெழுப்ப நீண்டகாலம் எடுக்கும்.

ஆபிரிக்க நாடுகள் பொருளாதார வீழ்ச்சியால் அதிக நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றன.

எனவே ஆபிரிக்க நாடுகளின் சிறுவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என யுனிசெவ் நிறுவனம் தெரிவித்தது. (2-5-8)

# பலியெடுக்கும் ஆழ்துளைக்கிணறுகள்; மூன்று வயதுச்சிறுவன் சடலமாக மீட்பு



(தெலுங்கானா)

தெலுங்கானா மாநிலத்தில் ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்த 3 வயதுச் சிறுவன் சடலமாக மீட்கப்பட்டான்

தெலுங்கானாவின் மேடக் மாவட்டத்தைச் சேர்ந்தவர் கோவர்தன். தனது மனைவி மற்றும் 3 வயது மகனுடன் போச்சன்பள்ளி கிராமத்தில் உள்ள தனது தந்தை வீட்டுக்கு விடுமுறைக்காகச் சென்றுள்ளார்.

கோவர்தனின் தந்தை விவசாய நிலத்தில் கடந்த வாரம் 3 ஆழ்துளைக் கிணறுகளை தோண்டியுள்ளார்.

அதில் தண்ணீர் கிடைக்காததால் அதை மூடிவிடுவதற்கான பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அவரது குடும்பத்தினரும் அங்கு உடனிருந்தனர்.

அப்போது யாரும் எதிர்பாராத விதமாக அங்கு விளையாடிக்கொண்டிருந்த கோவர்தனின் 3 வயது மகன் 120 அடி ஆழமுள்ள ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந் தான்.

இதனால் பதறிய சிறுவனின் குடும்பத்தினர் பொலிஸாருக்கும் தீயணைப்புத் துறைக்கும் தகவல் கொடுத்தனர்.

தகவலறிந்து அங்கு விரைந்து வந்த பொலிஸாரும் தீயணைப்பு வீரர்களும் சிறுவனை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

போர்வெல் இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டு சிறுவன் விழுந்த ஆழ்துளைக் கிணறு அருகே மற்றொரு கிணறு தோண்டப்பட்டது.

இரவு நேரமாக இருந்த போதும் விளக்குகள் பொருத்தப்பட்டு மீட்புப் பணிகள் நடைபெற்றன.

இந்நிலையில் நேற்றுக் காலை 3 வயது சிறுவனை தேசிய பேரிடர் மீட்புப் குழுவினர் சடலமாக மீட்டது அங்கு சோகத்தை ஏற்படுத்தியது. (2-5)

## நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்...

இந்த வீட்டுக் கடன் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்த தகவலை அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தில் வீட்டின் விலையில் நிலத்தின் மதிப்பு சேர்க்கப்படாது.

இந்த முயற்சி நடுத்தர வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கு மலிவு விலையில் வீடுகளை வழங்குவதற்கான அரசின் நோக்கமாகும்.

இந்த திட்டம் அரசு மற்றும் தனியார் துறையின் கூட்டு முயற்சியாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## எதிர்வரும் திங்கள் 1200 ஆவது...

மகளான ஜெரோமி உட்பட நான்கு பேர் உள்ளனர்.

இன்று (நேற்று) எனது மகளின் பிறந்ததினம். ஒவ் வொரு பிறந்தநாளிலும் எனது பிள்ளை என்னிடம் வரும் என்று எண்ணி இன்று தெரு ஓரத்தில் இருந்து கண்ணீர்விட்டுக் கொண்டிருக்கிறோம்.

அந்தக் கண்ணீர் 11 வருடங்களாக நீண்டுசெல்கின்றது. எமது வேதனையை தீர்ப்பதற்கு யாரும் முன் வரவில்லை. அனைவரது வாக்குறுதிகளும் எமக்கு ஏமாற்றமாகவே போய்விட்டது. எனது பிள்ளை என்னிடம் வரும் வரைக்கும் இந்த போராட்டத்தை தொடர்ந்து கொண்டே இருப்பேன்.

அத்துடன் எமது போராட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை 1200 ஆவது நாளை எட்டுகின்ற நிலையில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம் என்றார். (ம-3,299)

## வாகன வருமான வரி அனுமதி பத்...

தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

எதிர்வரும் 31.05.2020ஆம் திகதி வரை தண்டப்பணம் இல்லாமல் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கு பொதுமக்களுக்கு வசதியினை ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் பொது விடுமுறை நாட்கள் அதிகமாக காணப்பட்டமையினால் பொதுமக்களின் நன்மை கருதி பிரதம செயலாளரின் அறிவுறுத்தலிற்கு அமைய எதிர்வரும் 30.05.2020 மற்றும் 06.06.2020 சனிக்கிழமைகளில் கீழே குறிப்பிட்டுள்ள பிரதேச செயலகங்களில் காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான கருமபீடங்கள் யாழ்ப்பாணம், நல்லூர், தென்மராட்சி, கோப்பாய், "சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, கரவெட்டி, பருத்தித்துறை, கரைதுறைப்பற்று, கரைச்சி, வவுனியா நகர் மற்றும் மன்னார் நகர் ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ம-3)

## கிளிநொச்சியில் டிப்பருடன்...

படுகாயமடைந்துள்ளார்.

குறித்த விபத்து, நேற்றுக் காலை 10.30 மணியளவில் பரந்தன் பூநகரி வீதியில் இடம்பெற்றுள்ளது.

பூநகரி திசையிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மீது கிளிநொச்சியிலிருந்து யாழ் நோக்கி பயணித்த ரிப்பர் வாகனம் மோதியதனாலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தால் மோட்டார் சைக்கிளில் பயணித்த கிளிநொச்சியைச் சேர்ந்த சுப்ரமணியம் அன்னலட்சுமி (64 வயது) என்ற வயோதிபப் பெண் உயிரிழந்ததுடன், மோட்டார் சைக்கிளை செலுத்திய அவரது மகள் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த டிப்பர் வாகனம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-3,100)

அத கோடிபதி
ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 931
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.05.28
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 59,712,265/-
வெற்றி இலக்கங்கள்
13 33 60 72
ஆங்கில எழுத்து U
வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக 2020.04.02 என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 2817
வர்ணம் கபிலம்
திகதி 28.05.2020
வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக ......02.04.2020..... என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.
வெற்றி இலக்கங்கள்
19 30 45 53
மேடம்
டபள் சான்ஸ்
ரூ.500 பரிசுக்குரிய 3410
ரூ.100 பரிசுக்குரிய 824
விசேட இல.
வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

## பொதுத் தேர்தல் நடைபெற வாய்...

தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரின் கருத்துக்களை அமைச்சரவை கூட்டத்தின் போது, கோடிட்டுக் காட்டி பேசியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த தேசப்பிரியவின் கருத்துக்களை அவதானிக்கும் பொழுது குறைந்தது மூன்று மாதங்களுக்குப் பின்னரே தேர்தல் நடத்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக தகவல் வெளியிட்டிருந்த மகிந்த தேசப்பிரிய, நீதிமன்ற தீர்ப்பு வெளியாகி ஒன்பது தொடக்கம் 11 கிழமைக்குள் தேர்தல் நடத்தப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், அடுத்த மூன்று மாத காலங்களுக்கு தேர்தல் நடப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே தென்படுகின்றன என்று கவலை வெளியிட்டிருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய. இதே வேளை, ஐயாயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்கும் விடயத்தில் அரசியல் தலைமீடுகள் இல்லை என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, சில அதிகாரிகளே ஒத்துழைப்பு வழங்க மறுக்கிறார்கள் என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

இதற்கிடையில், ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இணைய மூலம் விண்ணப்பியுங்கள்...

பெற்றோர் கல்வியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை நிரப்பி, தமக்கு பொருத்தமான பாடசாலைகளின் அதிபர்களிடம் எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பத்தை கீழ்வரும் இணைப்பின் மூலம் தரவிரக்கம் https://moe.gov.lk/web/images/News/2020/grade1_admision2020/2020_ad_t.pdf செய்வதனால் பெற்றுக்கொள்ள முடியும். (ம-3)

## கொரோனா இடர்வேளையில் டெங்கு...

அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

டெங்கு நோய் தொடர்பில், மக்களுக்கான அறிவுறுத்தல்கள் முன்னாயத்தச் செயற்பாடுகள் தொடர்பிலான கலந்துரையாடல் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலின் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோவிட்-19 அச்ச நிலை மக்கள் மத்தியில் முழுமையாக இன்னமும் நீங்காத நிலையில் டெங்கு நோய்த் தொற்று பரவல் இன்னும் அச்சத்தை தூண்டி யுள்ளது.

கொரோன தொற்றை விட டெங்கு நோயே ஆபத்தானது.

கொரோனா பரவலை தடுக்க நாம் வீட்டை விட்டு வெளியேறாது சமூக இடைவெளியை பேணி னாலே போதும். ஆனால் டெங்கு நோய்ப் பரவலில் அப்படியல்ல.

எமது சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருந்தால் மட்டுமே டெங்கு நோய்ப் பரவலைத் தடுக்க முடியும்.

தற்பொழுது மழையுடனான காலநிலை டெங்கு நுளம்பு அதிகரிப் பிற்கு சாதகமாக அமைந்துள்ளது.

பொதுமக்கள் தத்தமது காணிகள், வீதிக் கரையோரங்களிலுள்ள மழை நீர் தேங்கி நிற்கக் கூடிய பிளாஸ் ரிக், இரும்பு பொருட்களை முறையான வழியில் அப் புறப்படுத்துங்கள். வீடுகளிலுள்ள சீமெந்து நீர்த் தொட்டிகள், வாழை மரங்களை வெட்டியபின் கிழங்குகள் காணப்படும் குழிகள் போன்றவற்றில் மழை நீர் தேங்கா வண்ணம் பார்த்துக் கொள்ளவும்.

தமது வீடு, காணிகளை சுத்தமாக வைத்திருப்பது அயலவர்களையும் நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்கும்.

வெளிநாட்டிலுள்ளவர்களின் பராமரிப்பின்றி காணப்படும் காணிகளை அரசாங்கச் செலவில் துப்பரவு செய்துவிட்டு அதற்கான செலவை சோலைவரியுடன் சேர்த்து அறவிடலாம் என்று ஆலோசனை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார். (ம-3,8)

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
சீட்டிழுப்பு திகதி 28-05-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2436
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 36 37 67 80
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/05/28
சீட்டிழுப்பு இலக்கம் 4142
ஆங்கில எழுத்து L
வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 9 4 9 4 2
தேசிய லொத்தர் சபை

## கொரோனா தொற்...

15 பேர் குவைத்திலிருந்து நாடு திரும்பியவர்களாவார்கள்.

டுபாயிலிருந்து அழைத்து வரப்பட்டு கிரிகம தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களில் 17 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

எஞ்சிய இருவரும் கடற்படையினர். கொரோனா தொற்றுடன் தற்போது 775 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 745 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். (ம-3)

## வலி.வடக்கில்...

யாழ். வலி வடக்குப் பகுதியில் உள்ள வீடொன்றின் கிணற்றில் இருந்து மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

வலி. வடக்கு குரும்பசிட்டி பகுதியில் உள்ள வீடொன்றின் கிணற்றினை வீட்டு உரிமையாளர் நேற்று வியாழக்கிழமை காலை சுத்தம் செய்துள்ளார்.

இதன்போது, கிணற்றிற்குள் மோட்டார் குண்டுகள் காணப்படுவதை அவதானித்துள்ளார்.

இந்நிலையில், இவ் விடயம் தொடர்பாக காங்கேசன்துறைப் பொலி ஸாருக்கு வீட்டு உரிமையாளரினால் அறிவிக்கப்படடுள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் குண்டு செயலிழக்க செய்யும் படைப் பிரிவுக்கு அறிவித்து, அவ்விடத்திற்கு வரவழைத்து குண்டுகளை மீட்டுள்ளனர்.

மேலும் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-3)

## மே 31, ஜூன் 4...

பின்னர் நாட்டில் ஊரடங்குச் சட்டம் பின்வருமாறு அமுல்படுத்தப்படும்.

மே 31 ஞாயிறு நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் முழு நாளும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும்.

ஜூன் 1 திங்கள் முதல் ஜூன் 3 புதன் வரை அனைத்து மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டம் முன்னர் போன்று இரவு 10.00 மணி முதல் அதிகாலை 4.00 மணி வரை மட்டுமே அமுல்படுத்தப்படும்.

ஜூன் 4 வியாழன் மற்றும் ஜூன் 5 வெள்ளி ஆகிய இரு தினங்களும் நாடு முழுவதிலும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும்.

ஜூன் 06 சனி முதல் அனைத்து மாவட்டங்களிலும் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் முன்னர் போன்று இரவு 10.00 மணி முதல் அதிகாலை 4.00 மணி வரை மட்டுமே அமுல்படுத்தப்படும்.

கொழும்பு மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்திற்கு அனுமதியளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கண்ணீர் அஞ்சலி

### கிருஷ்ணசாமி சிவசுப்பிரமணியம்

(முன்னாள் சர்வோதய வெளிக்கள பணிப்பாளர் - வடமாகாணம், சமூக சேவையாளர்)



மண்ணில் : 07.10.1952 விண்ணில் : 28.05.2020

அவர்கள் 28.05.2020 வியாழக்கிழமை அன்று காலமான செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி !

- வலம்புரி நிர்வாகம்

# அச்சுவேலியில் மர அரிவு ஆலை விசமிகளால் தீக்கிரை

(அச்சுவேலி)

அச்சுவேலி பத்த மேனி காளி கோவிலடியில் உள்ள மர அரிவு ஆலை இனந் தெரியாத விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் நடந்துள்ளது.

இச்சம்பவத்தில் செல்வராசா தர்மராசா என்பவருக்குச் சொந்தமான மர அரிவு ஆலையே தீயிடப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ம-28)


## பணிப் பெண் தேவை

யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள வைத்திய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய 45 - 50 வயதுள்ள வீட்டுப் பணிப் பெண் தேவை.

தொடர்புகளுக்கு:- (C-9640)

070 682 0111

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240

## பணியாளர் தேவை

யாழ்.நகர் மத்தியில் உள்ள மெடிக்கல் கிளினிக் பார்மசிக்கு பின்வரும் தகைமைகட்கு வேலையாள்கள் தேவை

1. Accountant (கணக்காளர்) ஆண்/பெண்
2. Attendant (ஆண்)
3. காசாளர் (பெண்)
4. தாதிய உத்தியோகத்தர் (அனுபவமுள்ளவர்கள் மட்டும்)
5. சுத்திகரிப்பு தொழிலாளர் (ஆண்/பெண்)

நேர்முகத் தேர்வுகள்: 29.05.2020 (வெள்ளிக்கிழமை), 30.05.2020 (சனிக்கிழமை) மதியம் 12 மணியளவில்

இடம்:- சன்றைஸ் மெடிக் கிளினிக்

388, ஆஸ்பத்திரி வீதி - யாழ். பஸ்நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 6069, 021 222 8013 (C-9640)

## வேலையாட்கள் தேவை

பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் உடனடியாகத் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழில் சார்ந்த நபர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (C-9614)

076 635 6560 / 075 055 6560

## துயர் பகிர்கின்றோம்



யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின்ஆரம்ப கால உறுப்பினராகவும் தலைவராகவும் செயலாளராகவும் கடமையாற்றிய

### A.K.சிவசுப்பிரமணியம்

அவர்கள் வவுனியாவில் அவருடைய இல்லத்தில் நேற்று (28.05.2020) காலமானார். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அங்கத்துவ நிறுவனங்கள்
யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்
76, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

(C-9642)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## மீண்டும்

### வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

## கண்ணீர் வணக்கம்

### 31ம் நாள் நினைவு தீர்க்கையில்

அமரர் சின்னத்தம்பி ரகுதாஸ் (ரகு)
(கட்டிட ஒப்பந்தகாரர்)
உரும்பிராய் வடக்கு, சமாதியடி,
உரும்பிராய், யாழ்ப்பாணம்.



தாயின் மடியில் 19 - 06 - 1969

தீயின் பிடியில் 27 - 04 - 2020

பண்பில் உயர்ந்தவனாய்
பாசத்தில் நிறைந்தவனாய்
ஊரதில் பற்றுக் கொண்டவனாய்
உற்றார், உறவினர், நண்பர்கள்
நன்மை, தீமை, சபைதனில் முதன்மையானவனாய்
அன்னதானப் பந்தியிலே சேவைக்காய் முந்தி நிற்கும்
நல்லதொரு பணியாளன்
கொடிய நோயது தாக்கியதால் இறுதியில்
ஒரு பிடி உணவுதானும் உன்னால்
உண்ண முடியவில்லையே..! இறைவா...
இவர் செய்த பாவம்தான் என்ன?
வாலிபப் பருவத்தோடே
பாதி வயதில் போகையிலே
பெற்ற வயிறு தவிக்குதடா...
உற்ற உதிரம் துடிக்குதடா...
கூடி நின்ற உறவெல்லாம் ஏங்கி நிற்குதடா...
ரகு அண்ணா...
உன் நினைவுகள் மட்டும் நீளுதடா...
நீ கட்டிக் கொடுத்த புது மனைகளெல்லாம்
உன் தொழில் திறமையை உயர்த்தி நிற்குதடா..
நித்தமும் நினைவுகள் நீள
உன் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்: த.வவி, து.கிரி


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# வடக்கு மாகாண கல்வி அமைச்சும் வலம்புரியும் இணைந்து வழங்கும் கல்விச் சேவை

# தரம்-5 புலமைப்பரிசில் வினாத்தாள்


நேரம்: ஒரு மணித்தியாலம் வினாப்பத்திரம் - 01

● 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய விடைகளைத் தரப்பட்ட மூன்றுவிடைகளில் இருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.

01. பின்வரும் கூட்டத்தில் ஒன்று வேறுபட்டது. அதனைத் தெரிந்து கோடிடுக.




02. பின்வரும் கூட்டத்தில் சேரக்கூடியது.




03 ஆம் 04 ஆம் வினாக்களுக்கு அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

03.




04.




● 05, 06 ஆகிய வினாக்களில் கீழுள்ள எழுத்துக்கள் எழுதப்பட்ட அட்டையை முகம்பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தெரியும் விதத்தைத் தெரிவு செய்க?


05.



06.




07. உருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?



1. 6 2. 2 3. 4


08. உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



1. 2 2. 4 3. 0


● 09, 10 ஆகிய வினாக்களில் எண் பிரசினங்களில் வெற்றிடத் திற்குப் பொருத்தமானவை எவை எனத் தெரிந்து அதன்கீழ் கோடிடுக.

09.



1. 4, 5 2. 3, 5 3. 5, 4

10.



1. 4, 2 2. 3, 4 3. 3, 5

11. கதிர்காமம் 1 2 7 8 5 3 என எழுதினால் கொடிகாமம் எழுதப்படுவது?

1. 9 6 8 5 3 2. 1 2 7 8 5 3. 9 6 8 5 0

12. சிம்மாசனம் என்ற சொல்லில் உள்ள எழுத்துக்களை மட்டும் பயன்படுத்தி எழுதப்படாத சொல்

1. மாசி 2. சனம் 3. சிம்மம்

13. சரியான கோவையைத் தெரிவு செய்க?

1. 6 x 5 - 3 = 33 2. 6 x 6 - 6 = 30 3. 4 x 6 + 5 = 30

14. எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண் யாது?

4, 54, 654, ..............

1. 3456 2. 7654 3. 7645

15. ஒரு கதவில் EXIT என எழுதப்பட்டிருந்தது. அது கண்ணாடியில் தெரியும் விதத்தைக் காட்டும் விடை எது?

1. TIXE 2. TIXƎ 3. TXIƎ


16. சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியம் எது?

1. மஞ்சல் விளக்கு எறிகின்றது.
2. மஞ்சள் விழக்கு எரிகின்றது.
3. மஞ்சள் விளக்கு எரிகின்றது.

17. நேற்று சனிக்கிழமையாயின் நாளை மறுநாள் என்ன கிழமை?

1. செவ்வாய் 2. திங்கள் 3. சனி

● வரிப்படத்தின் உதவியுடன் 18ஆம் 19ஆம் வினாக்களுக்கு விடை தருக.




18. D யிலிருந்து K வரையான தூரம் யாது?

1. 40 km 2. 30 km 3. 35 km

19. D யினூடாக A வரை சென்று அங்கிருந்து B, C ஊடாக K வரையான தூரம் யாது?
1. 38 km 2. 46 km 3. 43 km

20. காலை 8.30ற்கு வீடு நோக்கி நடந்து வந்தேன். எனது நிழல் எனக்குப் பின்னால் விழுந்தது எனின் நான் சென்ற திசை யாது?
1. மேற்கு 2. தெற்கு 3. கிழக்கு


● கூற்றை அவதானித்து அடுத்தவரும் இரு வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க. 1, 2, 3 ஆகியவற்றுக்குப் பதிலாக **X,Y,Z** என்னும் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.
பின்வரும் கணிதச் செய்கைகளுக்குப் பொருத்தமான ஆங்கில எழுத்துக்களைத் தெரிவு செய்க.


21. X + Y = ..............................
1. Y 2. Z 3. X

22. Z - X = ............................
1. X 2. Y 3. Z


23. பன்னிரண்டாவது ஒற்றை எண் யாது?
1. 21 2. 23 3. 19

24. நான்கு மனிதர் 4 நாட்களில் செய்யும் வேலையை இரண்டு மனிதர் எத்தனை நாட்களில் செய்வார்கள்?
1. 12 2. 8 3. 6

25. 
இத்திண்ம உருவை கோடுகள் வழியே இரு துண்டுகளாக வெட்டும்போது ஒரு பாதியில் காணக்கூடிய வடிவம் எது?



26. பின்வரும் உருக்களில் மரங்கள், பனைமரங்கள், வேப்பமரங்கள் என்பவற்றைக் காட்டும் சரியான உரு எது?



27. ஒரு பண்ணையில் 9 பிராணிகள் உள்ளன. அவை ஆடுகளும் கோழிகளும் ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 30 எனின் கோழிகளின் எண்ணிக்கை.
1. 06 2. 03 3. 04

28. "உங்கள் சுட்டெண்ணைப் புள்ளிக்கோட்டில் எழுதுக" இது....
1. ஓர் அறிவித்தல்
2. ஒரு தகவல்
3. ஓர் அறிவுறுத்தல்

29. இரவும் பகலும் மாறி மாறி வருவதற்கு காரணம் ?
1. சூரியன் புவியைச் சுற்றி வருவது
2. பூமி சூரியனைச் சுற்றி வருவது
3. பூமி தன்னைத்தானே சுற்றி வருவது

30. 435, 291, 563, 127, 394 இவ் எண்களை இறங்குவரிசைப்படுத்தும் போது நடுவில் வரும் எண் யாது?

1. 435
2. 394
3. 291

31. வகுப்பறையின் நீளத்தை அளக்கப்பயன்படும் அலகு எது?
1. சென்ரிமறீ றர் (cm)
2. மீற்றர் (m)
3. கிலோமீற்றர் (km)

32. பின்வருவனவற்றில் மிகச்சிறிய ஒற்றை எண் யாது?
1. 3007
2. 3006
3. 3087


33. எண் 5305 ஐக்காட்டும் சரியான கூற்று எது?
1. ஆயிரங்கள் 5ம், ஒன்றுக்கள் 5ம், நூறுக்கள் 3ம் உள்ளன.
2. பத்துக்கள் 5ம், ஒன்றுக்கள் 5ம், நூறுக்கள் 5ம் உள்ளன.
3. ஒன்றுக்கள் 5ம், ஆயிரங்கள் 5ம், பத்துக்கள் 3ம் உள்ளன.

34. 31 நாட்களைக் கொண்ட மாதமொன்றில் 1ம் திகதி சனிக்கிழமையின் அம்மாதத்தின் இறுதி சனிக்கிழமை எத்தனையாம் திகதியாகும்.
1. 31 2. 28 3. 29

35. பின்வருவனவற்றில் பொதுப்பால் பெயர்ச் சொல் எது?
1. ஜனாதிபதி
2. ஆசிரியை
3. பண்டிதை

36. சுவாதி புத்தகமொன்றில் 10ம் பக்கம் முதல் 25ம் பக்கம் வரை வாசித்தாள் அவள் வாசித்த பக்கங்கள் எத்தனை?
1. 16
2. 15
3. 17

● அடைப்பினுள் உள்ள தரவுகளை விளங்கி 37,38ம் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.




37.  இன் பெறுமானம் யாது?
1. 4 2. 3 3. 2

38.  இற்குரிய பெறுமானம் யாது?
1. 2 2. 3 3. 4

39. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது?
1. ஆசிரியரின் சிறப்பு
2. இறைவனின் சிறப்பு
3. பெற்றோரின் சிறப்பு

40. வாக்கியத்தில் நிறைவு செய்ய வேண்டிய சொல்லைத் தெரிவு செய்க?

நாளை காலை பாடசாலைக்கு வரும்போது மாணவர்கள் அனைவரும் மலர்மாலை கொண்டு வரவேண்டும் என அதிபர் ...............................

1. கூறலாம்.
2. கூறுகின்றார்.
3. கூறினார்.

# வடக்கு மாகாண கல்வி அமைச்சும் வலம்புரியும் இணைந்து வழங்கும் கல்விச் சேவை

## க.பொ.த.சாதாரணதரம் - சித்திரபாடம்

நேரம்: ஒரு மணித்தியாலம் வினாப்பத்திரம் - 01



1) இனங்காணல் :-
2) வரைந்தகலைஞர் :-
3) ஓவியமரபு :-
4) வர்ணப் பயன்பாடு :-
5) கலைத்திறமை :-



2. கனகசபாபதியினால் படைக்கப்பட்ட மற்றுமோர் படைப்பு (1)...........................ஆகும். இது கன்வஸ் துணியின் மீது (2).................. வர்ணத்தில் வரையப்பட்டுள்ளது. இதில் கேத்திர கணித உருக்கள் ஊடாக (3) ..................... இயல்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் சூழலும் பின்னணியும் (4)......................... தன்மையில் காட்டப்பட்டுள்ளது.



1) இனங்காணல் :-
2)வரைந்தகலைஞர் :-
3)ஓவியமரபு :-
4)வர்ணப் பயன்பாடு :-
5)ஒழுங்கமைப்பு :-




2.கலைஞர் மார்க்கு அவர்களின் புதியதொரு நுட்பமுறையில் படைக்கப்பட்ட (1)................... சிற்பமானது கலைத்துவம் மிக்கது. நாய் களின் உருவங்களைவிட (2).................... உருவம் சிறியதாக காட்டப்பட்டுள்ளது. கனவடிவ வாதப்பண்புகளும் (3).................... சிற்ப இயல்புகளும் வெளிப்படும் இச்சிற்பம் (4)...................... இனை ஊடகமாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவை நீளமாகவும் (5).................... பரப்புக்களையும் கொண்டிருப்பது சிறப்பம்சமான தாகும்.




1. இந்த விகாரை நிர்மாணிக்கப்பட்ட காலப்பகுதி?
2. கல்விகாரை வேறு எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?
3. இந்தபுத்தர் சிலைகளில் மேலோங்கியுள்ள பௌத்த எண்ணக்கரு?
4. இச்சிலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள கலைமரபு யாது?
5. இந்த புத்தர் சிலைகளின் பொதுப் பண்புகள் எவை?

அமர்ந்த நிலைப் புத்தர் சிலை I




7.இச்சிலையின் ஆசனமுறை?
8.இப்புத்தர் சிலை குறிக்கும் முத்திரை யாது?
9.புத்தர் சிலையின் தலைக்குப் பின்னால் காணப்படும் அமைப்பு?

அமர்ந்தநிலைப் புத்தர் சிலை II (வித்தியாதாரக் குகை)



10) இப்புத்தர் சிலை குறிக்கும் முத்திரை யாது?
11) புத்தர்சிலையின் ஆசனத்தில் காணப்படும் குறியீடு?
12) புத்தர் சிலையின் தலைக்குப் பின்னால் காணப்படும் அமைப்பு யாது?
13) வித்தியாதாரக் குகையினுள் உள்ள புத்தர் சிலையின் இரு மருங்கிலும் காணப்படும் வடிவம் யாது?
14) இப் புத்தர் சிலையின் தலைக்குப் பின்னால் காணப்படும் உருவங்கள் யாவை?

உறங்குநிலைப் புத்தர் சிலை



15) சயனநிலைப் புத்தர் சிலையின் நீளம் யாது?
16) இப் புத்தர் சிலையின் சிறப்பம்சம் யாது?

நின்ற நிலைப் புத்தர் சிலை



22) இச்சிலை வெளிப்படுத்தும் முத்திரை யாது?
23) இதன் உயரம் யாது?
24) இச்சிலை தொடர்பாக பரணவிதானவின் கூற்றுயாது?



பொற்கொல் விகாரைச்சிலை

1.இனங்காண்க :-
2.காணப்படும் இடம் :-
3.நிலை :-
4.சிலைபற்றி ஆய்வாளர்களின் கருத்தைத் தருக?
5. இச் சிலையின் கையில் தாங்கிய பொருள் பற்றி பரணவிதானவின் கருத்து யாது?

நிஸங்கலதா மண்டபம்



1.இலங்கையின் இக் கட்டிடம் கட்டப்பட்டகாலப்பகுதி?
...........................................................................
2.எம் மன்னன் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது?
...........................................................................
3.இம் மண்டபத்தின் மத்தியில் காணப்படும் தாதுகோபத்தின் வடிவம் யாது?
...........................................................................
4.இத் தூண்களின் வடிவமைப்பு எத்தகையது?
...........................................................................
5.இக்கட்டடநிர்மாணம் எத்தேவைக்காக நிர்மாணிக்கப்பட்டது?
...........................................................................

1. 20 ஆம் நூற்றாண்டின் சிறந்த பிரித்தானிய சிற்பக்கலைஞர் யார்?
...........................................................................
2. ஹென்றி மூரின் சிற்பங்களின் பண்பு யாது?
...........................................................................
3.ஹென்றி மூரின் சிற்பங்களின் தனிச் சிறப்புயாது?
...........................................................................
4.ஹென்றி மூரின் சிற்பங்கள் யாவை?
...........................................................................
5.ஹென்றி மூர் சிற்பங்களைஅமைப்பதற்கு பயன்படுத்திய ஊடகம் யாது?
...........................................................................

6. பின்வரும் சிலைகளினைப் பெயரிடுக.




...................................................................

இந்துமதச் சிலைகள்



1. இந்து சமயத்திற்குரிய இச்சிலையின் பெயர் யாது?
...................................................
2. பொலநறுவையில் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?
...................................................
3. தற்பொழுது இச் சிலை எங்கு காணப்படுகின்றது?
...................................................
4. இச் சிலை செய்யப்பட்ட ஊடகம் யாது?
...................................................
5. இச் சிலை வெளிப்படுத்தி நிற்கும் கருத்து யாது?
...................................................

பார்வதி சிற்பம்



**1.பொலநறுவையில் கண்டுபிடிக்கப்பட்ட இடம் ?**
...................................................
**2.தற்பொழுது இச்சிலை எங்கு காணபடுகின்றது?**
...................................................
**3.இச் சிலைசெய்யப்பட்டஊடகம் யாது?**
...................................................
**4.கைகளில் காட்டப்பட்டுள்ள முத்திரை யாது?**
...................................................
**5.இச் சிலையின் உடலமைப்பு எந்நிலையில் காட்டப்பட்டுள்ளது?**
...................................................

காரைக்கால் அம்மையார்



1.பொலநறுவையில் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?
...................................................
2.தற்பொழுது இச் சிலை எங்கு காணப்படுகின்றது?
...................................................
3.இச் சிலை செய்யப்பட்ட ஊடகம் யாது?
...................................................




1.இந்துசமயத்திற்குரிய இச்சிலையின் பெயர் யாது?
...................................................
2.பொலநறுவையில் ஏத்தனையாம் சிவாலயத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது?
...................................................
3.தற்பொழுது இச்சிலை எங்குகாணப்படுகின்றது?
...................................................
4.இச் சிலைசெய்யப்பட்ட ஊடகம் யாது?
...................................................
5. கைகளில் காட்டப்பட்டுள்ள முத்திரை யாது?
...................................................

## நாடகமும் அரங்கியலும் வினாப்பத்திரம் விடைகள் பகுதி -01


| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 11) 3 | 21) 4 | 31) 2 |
| 2) 2 | 12) 3 | 22) 3 | 32) 2 |
| 3) 2 | 13) 3 | 23) 1 | 33) 1 |
| 4) 1 | 14) 4 | 24) 4 | 34) 2 |
| 5) 3 | 15) 3 | 25) 4 | 35) 2 |
| 6) 1 | 16) 1 | 26) 4 | 36) 3 |
| 7) 2 | 17) 2 | 27) 3 | 37) 2 |
| 8) 2 | 18) 3 | 28) 2 | 38) 3 |
| 9) 1 | 19) 3 | 29) 1 | 39) 1 |
| 10) 3 | 20) 4 | 30) 3 | 40) 3 |

## தரம்-5 புலமைப்பரிசில் வினாப்பத்திரம் விடைகள் பகுதி -02

1) 1) சித்திரை
2) அடுக்குத்தொடர் / இரட்டைத்தொடர் / அடுக்குமொழி
3) அங்கும் இங்கும்
4) வண்டு
5) பூக்கள் / வண்டுகள்
6) களிப்புடன்
7) வாரீர் . பாரீர்
8) அதோ
2) 1) அமைச்சர்
   2) நட்சத்திரம்
3) 1) பயணிகள்
   2) மாலுமி
4) 1) கிறிஸ்துவுக்கு முன்
5) 1) வாடிவதங்கி
   2) கணீர் கணீர்
6) 1) மாங்காய்
   2) முப்புதர்
7) 1) பழம் + வகை
   2) பூ + அரும்பு
8) 1) கட்டுக்கதை
9) 1) பார்க்காத பயிரும் பாழ்
   2) களை பிடுங்காத பயிர்
10) 1) நிழல்
   2) 3
11) 1) அறிவித்தல்
   2) கட்டளைகள்
   3) அறிவுறுத்தல்
12) நாங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்/ வரவேற்கிறோம்.
13) 1) பச்சை
   2) வெள்ளை
   3) வண்ண
14) மலர்ந்தன
15) அவரது மருமகள் வெளிநாட்டில் வசிக்கிறாள்
16) அதில மானுடர் வேற்றுமை இல்லை. இங்கு யாவர்க்கும் ஒன்றென காணீர்.
17) i) எமது தாய்நாட்டைப் பேணிப் பாதுகாக்கவேண்டும்.
ii) எமது பாடசாலையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.
18) நாட்டின் அழகு என்னே!
19) பொருத்தமான வாக்கியங்கள்
20) 1) உணவு
   2) where do you live?
21) 1) பதினைந்து
   2) வேலாவ கீயத?
22) 1) முந்நூற்று எழுபத்தைந்து
   2) 36
3) 1m 25cm
4)



5) 1) 45.00
   2) 105.00
   3) 150.00
6) 1) 11 2) 13
   3) 7 4) வாழைப்பழம்
5) 6 7) IV,VI 8) 64
9) 240 கொடிகள்
10) 7l 250ml 11) 1 kg 600g
12) 1) 6 2) 7
13)



23) 1) 3 2) 1 3) 2
4) 3 5) 1 6) 1 7) 2
8) 3 9) 2 10) 3 11) 4
12) 3 13) 1 14) 4 15) 1
16) 3 17) 3
18) கம்பி வெட்டுதல்
   முறுக்குதல்
19) மாசி /பாக்குவெட்டுதல்
20) D 21) 4
22)4 23) 1
24)3 25)4
26)1 27) 3
28)2 29)4 30)3